Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 09 24-07-1992 வெள்ளிக்கிழமை ஓசை 157

## க.பொ.த. (உ/த) பரீட்சை மேலதிக நிதி கோரிக்கை

வடக்கில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் குறைநிரப்புப் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை உரிய நேரத்தில் மேற்படி உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் குறைநிரப்புப் பிரேரணையில் விளக்கமளிக்கப் பட்டுள்ளது. அரசின் இம் முடிவை அமுல் படுத்த 58 லட்சத்து (8 ஆம் பக்கம் பார்க்க)

## ( கூட்டுப்படைத் தலைமையகம் )

# முப்படைத் தளபதிகள் கடமையில் குறுக்கீடு செய்வதாக குற்றச்சாட்டு

### தளபதிகள் பிரேமாவிடம் முறையீடு

(கொழும்பு)

சிறிலங்கா முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் இணைந்து கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீதும், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா மீதும் குற்றம் சாட்டியுள்ளனர். தமது கடமைகளிலும், அதிகாரங்களிலும் குறுக்கிடுவதாக இவர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் முறையிட்டும் உள்ளனர்.

கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்கள் முப்படைத்தளபதிகளுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் மாற்றப்பட்டபின்னர் இராணுவத்தினருக்குள் ஆரம்பித்த முரண்பாடு தீவிரமடைந்து வருவதாக தெரிய வருகிறது. கூட்டுப்படை தலைமையகத்திடம் முன்னர் இருந்த அதிகாரங்கள் சிலவற்றையாவது மீண்டும் பெற்றுக் கொள்வதில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அக்கறையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா சிறிலங்கா ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று எழுதியிருந்ததாகவும் தெரியவருகிறது. ஹமில்டன் வனசிங்காவின் நிலைப்பாட்டிற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும், ஆதரவு அளித்ததாகத் தெரிய வருகிறது.

இந்நிலையில், தமது அதிகாரத்திற்குப் போடும் முட்டுக்கட்டையை உடைத்தெறிவதில், முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் தீவிரமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் கார (8 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ உளவாளிகள் பொதுமக்கள்மீது தாக்கு

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ உளவாளிகளினால், வவுனியாவில் 30 க்கு மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமருகே விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டவர்களே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தையும் செயல்பாடுகளையும் சரியான முறையில் தகவல் தரவில்லை என்று கூறி இவர்கள் (8 ஆம் பக்கம் பார்க்க)

### அரச களஞ்சியங்களில் கையிருப்புக் குறைகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச உணவுக் களஞ்சியத்திலுள்ள உணவுப் பொருள்களின் கையிருப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. தற்பொழுது கையிருப்பிலுள்ள உணவு சுமார் இரண்டரை வாரத்திற்கே போதுமானது ஆகும். இதனால் உடனடியாக மேலதிக கப்பல்களில் உணவுப் பொருள்கள் எடுத்து வராவிடில் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் தற்போது நடைமுறையில் இருக்கும் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தின் படியான விநியோகத்துக்கு சுமார் பத்தாயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் தேவை. ஆனால் தற்போது யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரிடம் ஆறாயிரம் மெற்றிக் தொன் வரையிலான உணவுப் பொருள்கள் மட்டுமே கையிருப்பில் இருக்கின்றது. இக்கையிருப்பு (8 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழருக்காகப் போராடுவதினால் புலிகளை நாம் ஆதரிக்கின்றோம்

**- ராம்தாஸ்**

(சென்னை)

தங்கள் மண்ணில் தமிழர்கள் நசுக்கப்படுகிறார்கள். அதற்காக விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள் ஈழத்தமிழர்களுக்காகபோரிராடுவதால் புலிகளை நாங்கள் ஆதரித்துப் பேசுகிறோம்.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் ஜூனியர் விகடனுக்குஅளித்த பேட்டியில்மேற் கண்டவாறுகுறிப்பிட்டுள்ளார்

விடுதலைப் புலிகள் பற்றிப் பேசினாலே தண்டனை என்கிற அளவுக்கு அரசு முடிவெடுத்திருக்கும் இந்த நாளில் நீங்கள் புலிகளை ஆதரித்துப் பேசுகிறீர்களே ஏன்? என்ன காரணம்? என்று நிருபர் கேட்டபோது-

இலங்கையில் உள்ள லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கருதியே இந்தப் பிரச்சினையை நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோம்.

தமிழ் நாட்டில் இப்போது விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள்? எல்லோரையும்தான் விரட்டி விட்டோமே நான் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கு சந்திக்கும் நிருபர்களை 'விடுதலைப் புலிகளால் உங்கள் ஊரில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதா?' என்று கேட்கிறேன் 'இல்லை' என்றே அவர்கள் பதில் சொல்கிறார்கள் என்று தெரிவித்தார்.

கோஷ்டிகளுக்கிடையே மோதல். பத்மநாபாகொலைச் சம்பவம் போன்ற வன்முறைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்கிறீர்களா? என்று கேட்டதற்கு- (8 ஆம் பக்கம் பார்க்க)

### ஏழாலை நோக்கி எறிகணை ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவம் ஏழாலை பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஒருவர் படுகாயமடைந்தார், வீடுகள் சில சேதமடைந்தன.

இரவு வேளைகளில்ஏழாலை பகுதிகளில் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை நோக்கி (8 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கிழக்கில் கடற்படை பீரங்கி தாக்குதல்

வடமராட்சி கிழக்குப்பகுதிகளைநோக்கி சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர்

நேற்றுமாலை 5-30 மணி முதல் ஆரம்பமாகிய இத்தாக்குதல் சிலமணிநேரம்நீடித்தது. வேம்படி, தாளையடி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் பரவலாக பீரங்கிக்குண்டுகள் வீழ்ந்துவெடித்தன. இத்தாக்குதலால் ஜே. பிரகலாதன் (வயது 11) என்பவர் படுகாயமடைந்துள்ளார். அதேவேளை வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து (8 ஆம் பக்கம் பார்க்க)

### முஸ். ஊர்காவல் பொலிஸ் ஓட்டமாவடியில் மோதல்

சிறிலங்கா பொலிசாருக்கும் முஸ்லிம் ஊர்காவற்படையினருக்குமிடையில் ஓட்டமாவடி கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மோதல் நடைபெற்றுள்ளது.

இம்மோதலைத்தொடர்ந்து பொலிசார் முஸ்லிம் கிராமவாசிகளை கண்டபடி தாக்கியுள்ளனர். அத்துடன் பல வீடுகளுக்குள் பொலிசார் புகுந்து பல அடாவடித்தனங்களைப் புரிந்ததாகக் கூறப்படுகிறது. (8 ஆம் பக்கம் பார்க்க)

### நான்கு அம்சத்திட்டம் அபாயகரமான கொள்கை

**- சிங்கள ஆரக்ஷக சங்விதானய**

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஏழு தமிழ் அரசியல்கட்சிகள் முன்வைத்துள்ள நான்கு அம்சத் திட்டம் இலங்கையின் அரசியலில் ஒருபுதிய அபாயகரமான கொள்கையை அறிமுகம் செய்வதாக இருக்கிறது என சிங்கள ஆரக்ஷக சங்விதானய தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக் (8 ஆம் பக்கம் பார்க்க)

### பாராளுமன்ற தெரிவுக்குழு பிரச்சினையை தீர்க்காது

**- ஷெல்டன் ரணராஜா**

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினையை தீர்க்கப் போவதில்லை. இங்கு சமஷ்டி முறை ஏற்படுவதை நான் ஆதரிக்கிறேன். இவ்வாறு சிறிலங்கா தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஷெல்டன் ரணராஜா நேற்று பாராளுமன்றதில் தெரிவித்தார்

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் பெரும் பான்மையினரின் நலன்களை மட்டும் நாம் கவனித்து வந்தால் போதாது. சிறுபான்மையினரின் உரிமைகளையும் நாம் மதிக்கவேண்டும் என தெரிவித்தார்.

### செல்லக்கிளி நினைவு தூபிக்கு மக்கள் மலரஞ்சலி

(யாழ்ப்பாணம்)

1983 யூலையில் திருநெல்வேலியில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட வெற்றிகர கண்ணிவெடித் தாக்குதலுக்கு தலைமைதாங்கி நடாத்திய லெப். செல்லக்கிளியின் நினைவுநாள் நேற்று யாழ். குடாநாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் லெப் செல்லக்கிளிக்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

அரியாலை லெப். செல்லக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' (சிதம்பர திருச்செந்திநாதன்) ''விண்ணில் அல்ல விடிவெள்ளி ''(தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது, ( 2875 )

### வியாழ மாற்றம்

04 - 08 - 1992 தொடக்கம் வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி? பலாபலன் அறிய வேலணை சோதிடர் V.A. சிவராசா 152,B அரசடி றோட், கந்தர் மடம் யாழ்ப்பாணம். ( 2881 )

### புதிய நூல்கள்

''கோப்பாய்- சிவம்'' வெளியிட்டபுதிய நூல்களை இன்னும் வாங்கவில்லையா? '' பொறுக்கிய முத்துக்கள் '' பொன்மொழித் தொகுப்பு அன்பர்களின் ஆட்டோக்கிராபில் பொறிக்க உதவும் ''பூந்தோட்டம்'' குழந்தைகளுக்கான இனிய பாடல்கள் '' நொடியும் விடையும் '' மூன்று பாகங்கள் எங்கும் கிடைக்கும். ( 2815 )

### ஆங்கில வகுப்புக்கள்

8ஆம்,9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டுகளுக்காக துரித ஆங்கில வகுப்புக்கள் இணுவில் தெற்கு, சாந்தி ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் 1 -8- 1992 மீண்டும் ஆரம்பமாகிறது. உடன் தொடர்பு கொள்ளவும். ( சி/ 4753 )

### விற்பனைக்கு

மில்லில் அரைக்க, உடைத்துத் தீட்டுவதற்கு ஏற்ற நவீன பாவனைக்குரிய 22 கோஸ் பவர் எஞ்சின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயந்தி மில், சுழிபுரம். [சி/4757]

## யாழ்ப்பாண மாநகரசபை டிராக்டர் கொள்வனவிற்கான கேள்வி அறிவித்தல்

பாவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விற்பனைவிலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 500/- உம், மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50 - உம் செலுத்தப்படுவதன் பேரில் 29-07-92 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 31-07-92 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதேதினம் பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22 - 07 - 1992

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
[சி-4746]

## யாழ்ப்பாணம்,பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1992/93

★ கலைமுதற் தேர்வு [G.A.Q]
★ வர்த்தக முதற்தேர்வு [First in Commerce]
★ விஞ்ஞான முதற் தேர்வு [G.S.Q]
★ விஞ்ஞானமானி B.Sc[புள்ளிவிபரவியல்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துள்ள மாணவர்களுக்கான விரிவுரைகள் 25-07-1992 இல் ஆரம்பமாகின்றன.

க. பொ. த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்து இதுவரை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான விரிவுரைகள்2-8-92 இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு,
உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4734)

## திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்

## பழைய மாணவர் சங்கம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினது பொதுக் கூட்டம் 2. 8. 92 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்களும், பாடசாலையின் ஏனைய பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் தற்போதைய ஆசிரியர்களும் சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

செல்வி வ. இம்மானுவல்
செயலாளர்.
(சி 4741)

## நினைவுகூருகின்றோம். . 1992 - 07 - 24

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் மானிப்பாயில் பேருந்து ஒன்றை வழிமறித்த சிறிலங்கா இராணுவத்தினரால் கீழே இறக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டவரான 'மனிதன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும்

இதேசம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் உட்பட பல தமிழர்கள். யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர், சங்கானையைச் சேர்ந்த தமிழ் இளைஞன், உட்பட பல தமிழர்கள்

1986ஆம் ஆண்டு மருத்துவமனையில் சுகயீனம் காரணமாக எம்மைப்பிரிந்த -
★ **மாயா** (மாயக்கிருஸ்ணன் - கோரங்கண்டல், மல்லாவி, துணுக்காய், முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாரதவிதமாக ஏற்பட்ட குண்டு வெடி விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் எம்மைப்பிரிந்த —
**புதியவன்** (கிங்ஸ்லி இராஜசூரியர் - சின்னப் பண்டிவிரிச்சான், மன்னார்)

1988ஆம் ஆண்டு அச்சுவேலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -
**கணேஸ்** (கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு)

1989ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்
1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -
**ரதீஸ்** (கி. ஜெகநாதன்)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**மிரேஸ்** (சோமசுந்தரம் பரமேஸ்வரன் - வெருகல், முட்டுச்சேனை, திருக்கோணமலை)

**சிங்கன்** (சண்முகராசா சுரேஸ்குமார் - பொற்பதிவீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்)

அம்பாறை, கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியில் இருந்து அப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நந்தன்** (சின்னத்துரை ஜீவானந்தன் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, யாழ்.)

**டயஸ்** (நாகமுத்து சிறிசங்கர் - மோகன் வீதி, அச்செழு, நீர்வேலி, யாழ்.)

**வினித்தா** (இலங்கேஸ்வரி தியாகராசா - புலோலி தெற்கு, யாழ்.)

**தவச்செல்வி** (சித்திராஞ்சலி ராமநாதன் - கேடில்ஸ் நகர், [கெற்பெலி] மிருசுவில், யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4748]

## கண்காட்சி நீடிப்பு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினரால் நடாத்தப்படும் மாணவர்களுக்கான கல்விக் கண்காட்சி நாளை சனிக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளதென கண்காட்சி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

### கடவுச் சீட்டுகள் கம்பியூட்டர் மயம்

(கொழும்பு)

குடிவரவு- குடியகல்வுதிணைக்களத்தின் நடவடிக்கைகள் கம்பியூட்டர் மயப் படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடவுச் சீட்டுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மூன்றாம்திகதி முதல் கம்பியூட்டர்மூலம் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் என குடிவரவு -குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் டபிள்யூ. ஈ. பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

### மாடியிலிருந்து வீழ்ந்து மரணம்

(கொழும்பு)

கொழும்பு ஹில்ரன் ஹோட்டல் ஏழாவது மாடியிலிருந்து வீழ்ந்து மாலைதீவு கோடீஸ்வரர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மாலைதீவு விமான சேவையின் பொது முகாமையாளரும் கோடீஸ்வர வர்த்தகருமான ஜனாப் இப்ராகிம் பீலி (வயது - 32) என்பவருக்கே மேற்படி மரணம் சம்பவித்துள்ளது.

கடந்த திங்கள் காலை 8.30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
21 — 06 — 1964



தாயக மண்ணில்
24 — 07 — 1991

### கப்டன் நந்தன்


இனவெறி பிடித்த சிங்கள இராணுவத்தை - கடுஞ்
சினமுடன் எதிர்த்துப் செங்களமாடியவனே!
நந்தனே! நீ ....
உன்னைப் பெற்றெடுத்த பெற்றோர்க்கு ஒரே ஆண்
மகன்

உடன் பிறந்தார்க்கு ஒரே சகோதரன்
உற்ற தோழர்களுக்கு இனிய நண்பன் ... நீ
பாசமதை மறந்து - பகைவரை வென்றிட
பாசறை புகுந்து - வேங்கையானாய்
பிரதேசப் பொறுப்பாளனாக மக்களோடு சேவை பல
- செய்து
பலரின் பாராட்டையும் பெற்றாய் சாதனைகள்
- படைத்தாய்
இயக்க நலன் பேணிட இயக்க நலன் பொறுப்பாள
- ராகினாய்
இறுதியில் எமையெல்லாம் விட்டு விட்டுக் கதிரவன்
- போல் மறைந்து விட்டாய்
ஆனால் மீண்டும் நீ நாளை உதிப்பாய் - அப்போது
இம் மண்ணும் மக்களும் மகிழ்ந்திடுவர்

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பெற்றோர், சகோதரிகள்,
நண்பர்கள்.

(2868)




மணிமாறன்; இன்று நீ எங்களுடன் இல்லை. இதை எப்படி நாம் ஜீரணிப்போம்? ஆயினும் ஜீரணிக்கின்றோம்.

ஆறடி உயரமும், உறுதிமிகு கட்டுடலும், சிவப்பா மஞ்சளா எனக்கூறமுடியாத உன் உடல் வர்ணமும், ஊடுருவி யாரையும் அளந்து விடும் உன் விழிகளும் சினிமா கதாநாயகன் போல் எம்மத்தியில் நீ உலாவந்த நினைவுகளும் எம் விழிகளில் நீரை வரவழைக்கின்றனவே! சர்மா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட நீ இன்று எம்மிடையே இல்லை!

ஆம்! பல தளபதிகளையும், தன்னிகரில்லாத போராளிகளையும் ஈழவிடுதலைப் போருக்கு அர்ப்பணித்த யாழ் இந்து அன்னை தன்னில் பூத்த சர்மா என்ற இன்னொரு மலரை இந்த மண்ணிற்காக ஈந்துவிட்டாள்.

இவன் - க. பொ. த. சாதாரணப் பரீட்சை நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தேசவிரோதக் கும்பல்களால் கைது செய்யப்பட்டான். காரணம் லெப். கேணல் ராதாவின் இறுதிச் சடங்கில் சாரணீயச் சீருடையில் கலந்து கொண்டதுதான். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று இவன் விடுதலை செய்யப்பட்டான். இவன் நிலை கண்டு இவன் எப்படிப் பரீட்சை எழுதப்போகிறான் என நாம் எண்ணினோம். முகம் வீங்கியிருக்க, சித்திரவதையினால் காயங்கள் சிவந்திருக்க எவ்வித சலனமுமின்றி பரீட்சையை எழுதிமுடித்து எம்மையெல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். ஒரு பாடத்தில் அதி விசேட சித்தியும், ஏனைய பாடங்களில் விசேட சித்தியும் பெற்று தனது உடல், உள உறுதியையும், திறமையையும் எமக்குப் புரியவைத்தான்.

இலங்கை அரசு சிங்கள மாணவர் மத்தியில் இனத்துவேசத்தை வளர்க்கும்முறையாகச் செயல்பட்டது. அதில் ஒரு முறையாக மாணவர்களுக்கென கொடுக்கப்பட்ட மதிய போசனத்திற்குரிய பணத்தை அன்பளிப்பு எனும் போர்வையில் மீளப்பெற்று பாதுகாப்பு நிதியில் சேர்த்துக் கொண்டது. இதன் விளைவை உணர்ந்து தனது கல்லூரி மாணவர்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறினான். இதன் விளைவாக பல ஆயிரம் ரூபா மதிய போசனத்திற்குரிய பணத்தைச் சேகரித்து அகதிகளாகவும், அனாதைகளாகவும் அல்லற்படும் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வழி செய்தான். மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கெல்லாம் தனது கல்லூரி மாணவர்களை தானே முன்னின்று அழைத்துச் செல்வான்.

பலதடவை போராளிகளுக்காக இரத்த தானம் செய்திருந்த இவன் தனது சக மாணவர்களுக்கு, இரத்த தானம் செய்யவேண்டியதன் அவசியம் பற்றி விளக்கிக்கூறி ஏனையோரையும் அப்பணியில் ஈடுபட வைத்தான்.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஆனையிறவுச் சமரின்போது களம் சென்று சேவை செய்யத்துடித்த இவனுக்கு வைத்தியசாலையில் காயம்பட்ட போராளிகளைப் பராமரிக்கும் பாரிய கடமை கிடைத்தது. அதற்காகக் கல்லூரி மாணவர்களை ஒரு ஒழுங்கு முறையில் ஒவ்வொரு நாளும் அனுப்பிவைத்தான். பலநாட்கள் இரவில் கண்விழித்து - பரீட்சைக்குப் படிக்க வேண்டியதையும் மறந்து தனது கடமையைத் தொடர்ந்தான். இப்பொழுதுதான் தானும் ஒரு போராளியாக வேண்டும் எனத்தீர்மானித்துக் கொண்டான்.

இந்நாளில்தான் யாழ் நகரிலுள்ள சகல உயர்தர மாணவர்களுக்குமான ஒரு போர்க்காலக் கருத்தரங்கைத் தலைமையேற்று நடத்தினான். விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும், ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்தும் போது ''சிந்தித்தது போதும் செயல்பட வாருங்கள்'' என அறைகூவல் விடுத்தான். எல்லோருக்கும் முன்மாதிரியாக இவன் சொல்வதைச்செயலில் காட்டுவான். அதனை நிரூபிக்கும் வகையில் தன் மாணவ நண்பர்கள் சிலருடன் வரிப்புலி சீருடை அணிய புலிப்படையில் தன்னை இணைத்துக்கொண்டான்.


அப்பொழுது இவன் பயிற்சிப் பாசறையில் புடம் போடப்பட்டுக் கொண்டிருந்தான். மிகவும் கடினமான பயிற்சிகளையெல்லாம் எதுவித சலனமும் இல்லாமல் செய்து முடிப்பான். பாசறைத் தீ வளர்த்துப் பாடல்கள் படித்தும் ''தாளலய'' நாடகங்கள் நடித்தும் சகபோராளிகளை மகிழ்விப்பான்.

இவ்வேளையில் தான் ஒரு நாள் எங்கள் எல்லோரது பிரத்தியேக விபரங்கள் எடுக்கப்பட்டது. அப்பொழுது விபரங்கள் எடுத்துக் கொண்டிருந்த போராளி இவனைப் பார்த்து ''காதல் உண்டா?'' எனக் கேட்க இவனும் ஆம் எனப் பதிலளித்தான். அதைப் பற்றி விபரம் தரும்படி கேட்கப்பட்டபோது ''எத்தனை பேர் என்று விபரம் தாறது'' என்று இவன் கேட்க அந்தப் போராளி திகைப்படைந்து இவனைப் பார்த்தான். அந்தப் போராளியைப்பார்த்துச் சிரித்தபடியே ''தமிழீழ மக்கள் அனைவரையுமே நான் காதலிக்கிறேன்'' எனப்பதிலளித்தான்.

ஒரு நாள் பயிற்சி முடிந்து நாம் ஓய்வாக இருக்கும்போது கூறினான். ''மச்சான் நீங்கள் யாரும் சாகிறதற்கு முன்னால் நான் சாகவேணும். ஏனென்றால் நீங்கள் யாரும் இறந்தால் அதை என்னால் தாங்கிக் கொண்டு இருக்க ஏலாது'' ஆம்! இவனின் அந்த வசனங்கள் எமது இதயத்தைப் பிழிந்த வண்ணம் உள்ளது ஏனோ! காலம் இவன் விரும்பியபடியே இவனை அணைத்துக்கொண்டது.

நாம் இராணுவ அணி நடைக்கான பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தோம். அதற்கான 'பாண்ட்' வாத்தியங்கள் பழக வேண்டியிருந்தது. குறுகிய கால இடைவெளியில் 'எக்கோடியன்' இசைக்கருவியை இசைக்கப் பழகியிருந்தான். கடந்த ஆண்டு நடைபெற்ற மாவீரர் தின நிகழ்ச்சிகளில் ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' எனும் பாடலுடன் இராணுவ அணி நடைப் பிரிவு மாவீரர்களுக்குத் தனது இராணுவ மரியாதையைச் செலுத்தியது. இது தமிழர்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். ஏனெனில் தமிழில் கட்டளை ஏற்று அணி வகுத்து நின்ற இந்த இராணுவப் பிரிவு தற்கால, எதிர்கால தமிழீழ இராணுவ பலத்தையும், அதன் உறுதியையும் உலகிற்கு உணர்த்தியது. இந்த அணிநடை சிறப்பாக அமைவதற்கு மணிமாறன் பலருக்கு அணிநடை பழக்கினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கால கட்டத்தில் இந்துக்கல்லூரியில் நடைபெறும் மாவீரர் தின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதை ஏற்று நாம் அங்கு சென்றோம். இவன் மாணவ சீரு



2-ம் லெப்டினனட்
மணிமாறன்

டையில் நின்று உரையாற்றிய அதே அரங்கத்தில் மீண்டும் வரிப்புலி சீருடையில் நின்று உரையாற்றினான். சொன்னதை செயலில் காட்டியவன் அல்லவா மணிமாறன். தொடர்ந்து ஒரு வகுப்பறையில் எமக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அவ்வகுப்பறையின் சுவரில் இவன் பெயரும் அதைத் தொடர்ந்து சில மாணவர்களின் பெயரும் காணப்பட்டன. ஆம்! இவர்கள் தம்மை இயக்கத்துடன் இணைத்துக் கொள்ளும் செய்தியைத் தெரியப்படுத்தும் கடிதங்களை பெற்றோர்களுக்கும், நண்பர்களுக்கும் இவ்வறையில் வைத்தே எழுதினார்கள். இவர்களின் பெயர்களைத்தான் அச்சுவர்கள் கூறின. இப்பொழுது அவை எமக்குப் புதிய அர்த்தமொன்றை புகட்டுகின்றன. அப்பெயர்ப்பட்டியல் நீளத்தான் போகின்றது. ஆம்! இது எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுதான் ''காஸ்ட்ரோ'' வீரமரணச் செய்தி வெளிவந்தது.

திடீரென்று செய்தி வருகின்றது! புல்லாவெளிப்பக்கமாக வெளியேற முயன்ற இராணுவத்துடன் சமர் மூண்டு விட்டதாக யாழ் மாவட்ட விசேட அதிரடிப் படைப்பிரிவில் இருந்தமணிமாறனின் படைப் பிரிவு ஒன்று களம் நோக்கி விரைகின்றது! அங்கு நின்ற பதினைந்து பேர் கொண்ட குழுவொன்றின் துணைத் தலைவனாக இருந்தான். அக்களத்தில் தான் இவனது திறமைகள் பூரணமாக வெளி வருகின்றது. இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினரைப் பலி கொண்ட அச்சண்டையில் பதினாறு இராணுவத்தினரின் உடல்களும், பல நவீன ரக ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டிருந்தது. அவ்வேளை இவன் காட்டிய வீரமும், விவேகமும் எம்மைப்பிரமிக்க வைத்தன. அகோரக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுகளின் மத்தியில் ஒரு கையில் இராணுவத்தினரின் உடலை இழுத்தபடியும், மறுகையில் தனது துப்பாக்கியை ஏந்திய படியும் நிலையெடுத்து, நிலையெடுத்து எமது அரண்நோக்கி ஓடிவந்த வேகமும், லாவகமும் கண்டு நாங்கள் வியந்தோம்.

இவ்வேளை இலங்கை இராணுவம் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்த T - 56, T-85 ரக நவீன டாங்கிகளைக்கொண்டு யாழ் மாவட்டம் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டது இதற்காக அமைக்கப்பட்ட புலிகளின் விசேட டாங்கி எதிர்ப்புப் படைப்பிரிவில் இவன் சேர்த்துக்கொள்ளப்பட்டான். அப்பொழுது பெருமைப்பட்டோமா அல்லது பொறாமைப்பட்டோமா எனக் கூறமுடியாத ஒரு உணர்விற்கு உட்பட்டிருந்தோம்.

அப்போது ஒரு சகபோராளி கூறினான் ''ஹெவிவெப்பன்ஸ் காரங்கள் தான் முதலில் மண்டையைப் போடுவான்கள் நீ கவனம்'' என்று. அப்பொழுது இவனது முகத்தில் படர்ந்த புன்முறுவலை நினைக்கும் பொழுது உடலில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வு தான் ஏற்படுகின்றது. அப்பொழுது இவன் கூறினான். ''என்னால் மச்சான் R.P.G. யையும் என்னையும் காப்பாற்ற ஏலும் என்று.

விடுதலைப் புலிகளின் 'களத்தில் நின்று வேங்கைகள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்ச்சியின் போது தனது பெற்றோரைச் சந்திக்கின்றான். அப்போது இவனது தாய் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். அதற்கு இவன் ''எல்லா அம்மா மாரும் இப்படியேகூப்பிட்டால் பின்னால் ஆமிதான் வந்து நிற்பான்'' என்று கூறினான். அதற்கு இவன் அன்னை ''உன்னை இயக்கத்தை விட்டு வரச் சொல்லவில்லை! நீ வரமாட்டாய் என்றும் தெரியும்'' எதற்கும் இரண்டொரு நாள் வந்து நின்று விட்டுப்போ'' என்று கூறினார், இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாவீரர்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் அடக்கம் செய்வது பற்றிய பேச்சு எழுகின்றது. அப்போது ''என்னம்மா யோசிக்கிறீங்க!? எரிக்கும் மரபில் வந்த எங்களை எப்படிப் புதைப்பது என்றா?'' அந்தப் பிரச்சினை உங்களுக்கு வராது ஏனென்றால் நான்கரும்புலிகள் மாதிரித்தான் சாவேன்'' ஆம்! காலன் இவன் கூறிய படியே கவர்ந்து சென்றுவிட்டான்.

''ஒப்பரேசன் சண்டமாருதம்'' என்னும் இராணுவ நடவடிக்கை மூலம் தெல்லிப்பழைப் பக்கமாக இராணுவம் முன்னேறத் தொடங்கியது. வழமை போலவே பாரிய குண்டு வீச்சுக்களுடனும் எறிகணை வீச்சுக்களுடனும் முன்னேறும் இராணுவத்திற்கு T-85 ரக டாங்கி பெரும் துணையாக இருந்தது. இராணுவத்தின் முன்னேற்றம் முறியடிக்கப்பட வேண்டுமானால் அந்த டாங்கிகள் தகர்க்கப்பட வேண்டும் அல்லது செயலிழக்கப்பட வேண்டும். இவ்வேளை இவனுக்கு அந்த டாங்கியைத் தகர்க்கும்படி கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

இவன் தான் டாங்கி எதிர்ப்புப் பிரிவிற்குத் தலைமை தாங்கி வந்திருந்தான். அந்த டாங்கியைத் தாக்குவது அவ்வளவு இலகுவானதல்ல; தலையைத் தூக்கினால் தலை உனக்குச் சொந்தமல்ல என்ற நிலை. சுடுகுழல் இன்னும் திரும்பினால் அது இவன் பக்கம் குண்டுமாரி பொழியும் நிலை. ''கரணம் தப்பினால் மரணம்'' என்ற சூழ்நிலை. உடனே வில்லில் இருந்துபுறப்படும் அம்புபோல் - இரையை நோக்கிப் பாயும் வேங்கை போல் எழுந்து ஓடிச்சென்று அந்த டாங்கியின் முன் நிலையெடுத்துத் தனது R.P.Gஇன் முதலாவது உந்துகணையைச் செலுத்தினான் - குறி இம்மியும் பிசகாமல் டாங்கியில் பட்டு - வெடிக்கின்றது. ஆயினும் டாங்கி முற்றாகச் சேதம் அடையவில்லை. உடனே தனது நிலைகளை மாற்றிய வண்ணம் அடுத்தடுத்து இரண்டு உந்து கணைகளையும் செலுத்தி அந்த டாங்கியை நிர்மூலமாக்கினான். அத்துடன் இராணுவத்தின் முன்னேற்றம் தடைப்படுகின்றது இவன் வெற்றி வீரனாகவெளி வருகின்றான் அன்று தளபதிகள் தொடக்கம் சாதாரண போராளிகள் வரை இவனுடைய பெயர் அடிபடுகின்றது.

மீண்டும் கட்டைக்காடு, புல்லாவெளிப்பக்கமாக ''ஒப்பரேசன் பலவேகய II'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுகின்றது. இராணுவத் தளக்கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கை முறியடிக்கப்பட வேண்டிய தொன்று. மீண்டும் ''மணிமாறன்'' களத்தில் இறங்கினான். ஆனால் களத்தில் குண்டடிபட்டு விழுப்புண் ஏற்று களத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றான். இரத்தப் பெருக்கு நிறுத்தப்பட்டு ஓய்வெடுக்கும்படி கூறப்படுகின்றது. ஆனால் இவனோ ''எனக்கு ஓய்வு தமிழீழம் கிடைத்த பின்னர் தான்'' என்று கூறி விடாப்பிடியாக மீண்டும் களம் நோக்கி விரைகின்றான். ஆம்! நவீன டாங்கிகளைத்தகர்த்த இவன் 30-06-1992 அன்று ''ஈழ மண்ணிற்கு உரமானான்'' ''கட்டைக்காற்றில் வீசும் காற்றில் கரைந்தான்''

மாவீரர் பட்டியலில்
இணைந்தான்
எம் நெஞ்சமதில் நிலைத்
தான்

நண்பனே!
உன் ஆயுதம்
எம் கரத்தில்!
உன் உறுதி
எம் மனதில்!
உன் உதிரம்
புதிய புலிகளில்!
உன் சுவடுகளில்
எம் பாதங்கள்!
இலக்குத் தெரிகின்றது
பயணம் தொடர்கிறது!

"தூயவன்"

# "தமிழருக்குக் கல்வி மறுக்கப்படுவது அரசின் பொருளாதார, அரசியல் கொள்கை விஸ்தரிப்பாகும்"

பேராசிரியர் பீற்றர் சாக் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்துக்கும் பரிச்சையமானவர். பல்கலைக்கழக மாணவராகக் கலாநிதி தேர்வுக்கு ஆய்வு மேற்கொண்ட காலம் முதலே தமிழர் பிரச்சினையில் ஆழ்ந்த பார்வையும், தமிழர் பண்பாட்டில் நிறைந்த ஈடுபாடும் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், சுவீடன் உப்சலா பல்கலைக் கழகத்துக்கும் இடையிலான பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கு ஆதாரமாக விளங்கும் பேராசிரியர் பீற்றர் சாக், உப்சலா பல்கலைக் கழகத்தில் சமயங்களின் வரலாற்றுத் துறைக்குத் தலைவராக இருந்து வருகிறார். இவரது பௌத்தம் பற்றிய வெளியீடுகள் பல சந்தர்ப்பங்களில் விவாதங்களையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்திருக்கின்றன.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டதற்கான காரணங்கள் என்ன? அது எப்போது ஏற்பட்டது?**

★ இலங்கைத் தமிழர் விஷயத்தில் எனக்கு ஈடுபாடு ஏற்படுவதற்கான காரணம் கல்வியோடு காரணகாரியத் தொடர்பு கொண்டது. பல்கலைக்கழகத்தில் கலாநிதி தேர்வுக்கான ஆய்வு எனக்கு இருந்ததால் 1970 இல் முதல் முறையாக யாழ்ப்பாணம் வந்தேன். இதே சமயம் எனது கலாநிதி தேர்வுக்கு நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருள் சிங்கள பௌத்தம். சிங்கள பௌத்தத்தை ஆய்வதோடு நான் நின்றுவிடவில்லை. அதனோடு இணைந்த தமிழர் வரலாற்று உண்மைகளையும் உணரக் கூடியதாக இருந்தது. 1970க்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்தேன் பின்பு ஏற்பட்ட முரணான நிலை காரணமாக 1987-1990 காலப்பகுதியில் இங்கு வருவதற்கான அனுமதி எனக்கு மறுக்கப்பட்டது. தமிழ் பிரதேசத்துடன் உறவாடியதால் தமிழரின் பிரச்சினையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

**தமிழர் பிரச்சினையில் நீங்கள் உணர்ச்சி பூர்வமாக ஈடுபடுகிறீர்களா அல்லது வலுவான மனிதாபிமானத்தினாலா?**

★ தமிழரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற சுயசிந்தனையும் எனக்குண்டு. சிறிலங்கா அரசினால் நடைமுறைப் படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறையினால் தமிழ் இளைஞரின் கல்வி பின்தள்ளப்பட்டு சிங்களவரின் கல்வி பெருமைப்படுத்தப்பட்டது. அரசின் அரசியல் நடவடிக்கைகளினால் தமிழர் கல்வி முன்னேற்றத்தில் தடைகள் தோற்றுவிக்கப்பட்டன. இதனால் தமிழர் கல்வி மேம்பாட்டிற்குப் பயன் பொருத்தமாய் உதவ வேண்டும் என்ற கரிசனை உண்டாகியது. இதன் விளைவுதான் உப்சாலா பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (*Link Program*) இணைப்புத் திட்டம் மேலும் 1970களில் தமிழரின் தாயகம் என்ற புனித இலட்சியம் வளர்ந்த காலததில் அதன் தீவிரப் போக்கினால் உணர்ச்சி பூர்வமாக நான் கவரப்படவில்லை. மொழி, இனம் என்ற பெயரால் தமிழருக்குக் கல்வி வாய்ப்பு ஒடுக்கப்படுவது போன்ற நிலைக்கேற்ப எனது ஆதரவு தமிழர்பால் ஈர்க்கப்பட்டது. ஒரு சாதியினருக்கு கல்வி வசதிகள் மறுக்கப்படும் தன்மை ஒரு கல்வியியல் பிரச்சினை என்று கருதுதல் கூடாது. அது அரசின் பொருளாதார, அரசியல் கொள்கையின் விஸ்தரிப்பாகும்.

**சிங்கள பௌத்தம் பற்றித் துறைபோக்கற்றவர் என்ற முறையில் சிங்கள பௌத்தம்குறித்த உங்கள் அபிப்பிராயம் என்ன?**

★ சிங்கள பௌத்தம் சில தவறான நம்பிக்கைகளைச் சிங்களவர் மத்தியில் உருவாக்கி வருகிறது இது ஆச்சரியமான ஒருவிஷயம். பௌத்த சமயத்துக்கு வலுவான ஒரு பொதுத்தன்மை இருந்த போதிலும் மாறுபாடு சார்ந்த முறையில் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கந்துடன் 1972-ம் ஆண்டு யாப்பில் பௌத்தம் முதன்மை பெறுகின்றது. சிங்கள பௌத்தத்திற்கும் சிங்கள கலாசாரத்துக்குமிடையே இறுகிய பிணைப்புகள் உள்ளன. முதல் நூலான மகாவம்சம் இன நோக்கில் அமைந்த நூல் சிங்கள இனவாதச் சிந்தனையில் ரிஷி மூலம் மகாவம்சம் அநாகரீக தர்மபாலா சிங்கள இன மறுமலர்ச்சிப் போக்கில் அக்கறை காட்டினார். சிங்கள மயமாக்குதல், தாய்நாட்டைப் பேணிக்காக்கவேண்டும் என்ற ஹெல உறுமய இயக்கம், ஜாதிக்க சிந்தனை இவையெல்லாம் மகாவம்ச சிந்தனையின் அடிப்படையில் எழும் கருத்தக்களாகும். படிமுறையில் பௌத்த சமயத்துக்கு முதலிடம் வழங்கியிருப்பதானது, அரசின் போக்கைப் பிரதிபலிக்கிறதே ஒழியப் பன்மைக்கொள்கைக்கு (*Pluralism*) எவ்விதமான இடமும் இல்லை என்பதையே காட்டுகிறது.

**தமிழ் பௌத்தம் பற்றிய சர்வதேச மாநாடுகளிலும், கருத்தரங்களிலும் நீங்கள் கலந்துகொண்டுள்ளீர்கள். தமிழ் பௌத்தத்தில் நீங்கள் அக்கறை காட்டுவதற்கான சிறப்புச் சூழல் என்ன?**

★ தமிழர்சரித்திரத்தில் குறிப்பிட்ட காலத்தில் வழக்கிலிருந்து பௌத்தம், அக்காலத்தில் சமுதாய கலாசாரத் தன்மைகளை உள்ளடக்கிய சுயமான முத்திரையைப் பிரதிபலிக்கிறது. ஜப்பான், சீனா, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளில்அந்தந்த நாடுகளின் கலாசார நிபந்தனை வெவ்வேறு விதமான பாதிப்புகளைப் பௌத்தத்தில் ஏற்படுத்தியுள்ளன. சிங்களபௌத்தத்தில் காணப்படும் சாதீயம் ஏனைய நாட்டுப் பௌத்தங்களில் கிடையாது. இதேபோல் தமிழ் பௌத்தமும் அதன் பண்பாட்டுக் கோலத்துக்கு அமைய அலாதியான குணவிசேஷங்களைக் கொண்டிருந்தது. 4 முதல் 13ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் தமிழர் வரலாற்றையும், பண்பாட்டையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் தமிழ் பௌத்தம் வியாபித்திருந்தது. நாகபட்டணத்தில் எடுக்கப்பட்ட இந்து சிற்பவியல் வடிவிலான சோழர் காலத்துப் புத்தர் சிலையும், இலக்கியம் போன்ற வேறு சான்றுகளும் பௌத்தம் தமிழர் மத்தியில் பரவியிருந்தது என்பதற்கான ஆதாரங்களாகும்.

**இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டும் வகையில் நீங்கள் இதுவரைமேற் கொண்ட ஆக்கபூர்வமான செயல்கள் என்ன?**

★ யாழ்ப்பாணத்தில் நிலவும் அழிவும், கோரத்தையும்கண்ட நான் அரசியல் தீர்வின் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளேன். சுவீடன் நாட்டு வெளியுறவுச் செயலகத்துக்கு என்னால் எழுதப்பட்ட கடிதமொன்றில், சுவீடன் அரசை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும்படி கேட்டேன். மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்துச் சுவீடன் சிறிலங்கா அரசுக்கு எழுதியது. கடிதத்தின் பிரதி எனக்கும் அனுப்பப்பட்டது. கொழும்பிலிருந்து பதில் எதுவும் இல்லை. புலிகளின் பிரதிநிதி திரு. லோறன்ஸ் திலகரும் சுவீடன் அரசின் ஆலோசனைக்கு ஆதரவு தெரிவித்து எழுதியிருந்தார். கடிதத்தில் படப்பிரதிகளை உலகிலுமுள்ள அரச சார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். இனப்பிரச்சினைக்கான அமைச்சர் எஸ். தொண்டமானின் தீர்வுத் திட்டமும் தடையாகி விட்டது. பௌத்த பிக்குகளின் சமாதானத் தூதும் பயன்தரவில்லை. நோர்வே மனித உரிமைகள் குழுவும் மத்தியஸ்தம் பற்றிப் பேசியது. ஆனால் எல்லாம் கனவாய்க் கதையாய் முடிந்து விட்டன.

**தமிழர் பிரச்சினை குறித்து உங்கள் நாட்டுமக்கள் (சுவீடன்) எவ்வாறான அபிப்பிராயம் வெளியிடுகிறார்கள்?**

★ சிறுபான்மையினர் உலகம் முழுவதும் மெலினப் படுத்தப்பட்டுள்ளார்கள். சிறுபான்மையினர் சார்பான நியமம் ஐரோப்பாவில் நிலவுகிறது.

பேட்டி கண்டவர்
**மதன்**

இதனால் சிறுபான்மையினமான தமிழர் மீது சுவீடன் மக்களுக்கு இயற்கையான ஒரு அனுதாபம் உள்ளது இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல், மனச்சாட்சியின் கைதிகள், மனிதநேய ஸ்தாபனங்களின் அறிக்கைகள் மற்றும் ஐரோப்பாவில்வாழும் இலங்கைததமிழ் புத்திஜீவிகளின் பிரச்சாரத்தினால் சுவீடன நாடடு மக்களின் ஆதரவு தமிழர் பக்கம் உள்ளது. மற்றும்படி, சாதாரண சுவீடன் நாட்டுப் பிரஜைக்குதமிழரைப் பற்றியும், அவர்கள் பண்பாடு, பாரம்பரியம் பற்றி எதுவுமே தெரியாது எதனையும் ஆதரிக்கும் பதுமை நிலையிலும் சுவீடன்மக்கள் இல்லை. எதையும் படித்துணர்ந்த பின்னரே ஆதரவை வெளியிடுகிறார்கள்.

**யாழ்ப்பாணத்தில் நிலவும் போர்ச் சூழல் பற்றிச் சிங்கள மக்கள் என்ன கருதுகிறார்கள்?**

★ யாழ்ப்பாணம் முழுவதுமே புலிகளின் முகாம் புலிகள் மக்களை வதைத்தும் அல்லல் படுத்தியும் வருகிறார்கள். நிர்ப்பந்தமாக இளைஞர்களும்,



பீற்றர் சாக்

யுவதிகளும் 'புலிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள். மக்கள் வேதனையையும், துயரங்களையும்' தான் அங்கு கேட்கலாம். இவ்வாறு அநேகமான சிங்களவர்கள் கருதுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் பயங்கரமான சூழ்நிலை நிலவுதாகக் காரணம் கற்பித்து உல்லாசப் பயணிகள் விஸாவில் கொழும்பு வந்த எனது மனைவிக்கும், பிள்ளைகள் இருவரும் யாழ்ப்பாணம் வர அனுமதி கொழும்பில் தரப்படவில்லை. யாழ்பபாணத்தில் அவர்கள் நினைப்பது போல் நிலமையில்லை பல கஷ்டங்கள் மத்தியிலும் மக்கள் சந்தோஷமாக வாழ்வதை என்னால் அவதானிக்க முடிகிறது. மீட்கப்பட்ட பிரதேசம் என்று அரசினால் வர்ணிக்கப்படும் திருக்கோணமலையில் தான் கெடுபிடி சந்திக்குச் சந்தி, மூலைக்கு மூலை இராணுவக் காவலரண்களும் சோதனைச்சாவடிகளும்,

**இக் கால கட்டத்தில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வந்து போகும் நீங்கள் 1970 களுக்கும் 1992க்கு மிடையில் என்ன வித்தியாசத்தை அவதானிக்க முடிகிறது?**

★ தென்னிலங்கையில் இளைஞர் பிரச்சினையைத் தீர்சக தரிசனம் கொண்ட அரசியல் விவேகத்துடன் கையாளாததால் ஜனதா விமுக்திப் பெரமுனையினர் (ஜே. வி. பி) 1971 இல் போராட்டம் மேற்கொண்டனர். அது அரசியல் வன்முறைக் கொலைகளுக்குக் காரணமாகியது. 1972 இல் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்களும் தமிழ் மொழியும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டன. இக் கால கட்டத்தில் தேடத்

(7ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலை 1983

ஜூலை 1983 - பெரியது, இனியது
போற்றுதற்குரியது.
கொழும்பு மாநகரைக் கொழுத்திய இந்நாள்
தமிழர் விடுதலைத் தீயையும் வளர்த்தநாள் அன்றோ
அதனால்
அது பெரியது இனியது அதைப் போற்றுதும்

இந்நாள் -
நம் உடைமைகள் பல வெந்தன
நம் உயிர்களும் வெந்தன,
ஆயினும் ஆயினும்
வெந்த இந்நாளில் -
நம் உந்தியில் பூத்ததே விடுதலைச் சிருஷ்டியே.
அது பெரியது அதனால் ஜூலையைப் போற்றுதும்

இந்நாள்-
கீழ்மையில் மிதந்தநாள்
கீழ்மையில் ஆழ்ந்து அதன் எல்லையைக் கண்டநாள்
கீழ்மைகள் கொடியன, வெறுப்புக்குரியன
ஆயினும் ஆயினும்
கீழ்மையில் பூத்ததே விடுதலைத் தாமரை
கீழ்மைப் பசளையில் விளைவதோ விடுதலை?
அந்தக் கீழ்மையும் பெரியது, இனியது அதைப்
போற்றுதும்,

இந்நாள் -
நம் பிழைப்புகள் போயின
செல்வங்கள் சிதைந்தன.
குளுமையூட்டும் சொகுசும் போயிற்று-
எல்லாம் இழந்த இத்துயர் நாளில்
எழுந்ததே விடுதலைக்கொழுந்துகள் சுயத்திலே
அந்தத்துயர்பெரியது அதைப்போற்றுதும் போற்றுதும்

இந்நாள்
உழைப்பு, உண்ணல், சுகிப்பு என்னும்
போதையில் கிடந்த நாம்
போதையில் கிடந்த நாம்
அறிவு ஆண்மை, அமைதி செயல்படும்
வீட்டை நினைத்தனம்
வீட்டை நினைத்தனம்
விடுதலை என்பது வீடெனக் கண்டோம்.
அது இனியது அதைப் போற்றுதும் போற்றுதும்

- மு. பொன்னம்பலம்

நன்றி : விடுதலையும் புதிய எல்லைகளும்

# சதுரங்கத்தில் உயிர்வாழும் - ராவ்

மு. திருநாவுக்கரசு

சங்கர் தயாள் சர்மாவைப் பலவீனப்படுத்தி கதிரையில் ஏற்றியுள்ளார் நரசிம்மராவ் அது ஏன்? எப்படி?

தென்னாட்டைச் சேர்ந்த ஒரு சிறுபான்மை இனத்திலிருந்து ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருப்பவர் பி. வி. நரசிம்மராவ் அத்துடன் அவரது அரசாங்கமும் ஒரு சிறுபான்மை அரசாங்கம் மேலும் அவர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த காலகட்டம் முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு உள்நாட்டு ரீதியாக அரசியல் கொந்தளிப்பு மிக்க காலம் பொருளாதாரப் பிரச்சினை ராமஜென்மபூமி - பாபர் மசூதிப் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை எனப்பல,

அரசியலில் சரிந்து மங்கி மறைந்து கொண்டிருந்த நரசிம்மராவுக்கு ராஜீவின் மரண வடிவில் அதிர்ஷ்ட தேவதை ஒரு மூலையில் நின்று கையை நீட்டியது. தனது அரசியல் அனுபவத்தினாலும் சாணக்கியத்தினாலும் அக்கரத்தினை இறுக்கப் பற்றிப் பிடித்துக் கொண்டு தன்னைப் பிரதமராக்கினார். ஒரு பரந்த இந்தியா உலகின் இரண்டாவது சனத்தொகையைக் கொண்ட நாடு. பல இன.மத, மொழி, பிராந்திய வேறுபாடுகள், சாதிப்பிரச்சினைகள் என்பவற்றால் மிகவும் சிக்கல் வாய்ந்ததாய் காணப்படும் ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அதுவும் ஒரு சிறுபான்மை இனத்தவன் தனது சாணக்கியத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டு ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார்.

இந்திய ஜனாதிபதிப் பதவி சம்பிரதாய பூர்வமானதாக இருக்கின்ற போதிலும் சிறுபான்மை அரசாங்கம் என்ற வகையிலும், கட்சியின் பலத்தை நிரூபிக்க வேண்டிய நிலையிலும் நரசிம்மராவுக்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு முக்கிய விடயமாக இருந்தது. ஒரு ஜனாதிபதி அபேட்சகரைத் தேர்ந்து எடுக்கும் பொறுப்பை கட்சியின் செயற்குழு நரசிம்மராவிடம் விட்டுவிட்டது.

நரசிம்மராவ் யாரைக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப் போகிறார் என்ற எதிர்பார்க்கை பெரிதாய் இருந்தது. நரசிம்மராவ் நீண்ட நாட்களாக குறிப்பாக யாரின் பெயரையும் எட்டவில்லை. தனது வேட்பாளர் ஒருவர் தோல்வி அடைந்திடக்கூடாது என்பதில் ராவ் மிக அக்கறையாய் இருந்தார். தான் ஒருவரை நிறுத்தி தோல்வி அடைவதைவிடவும் எதிர்க்கட்சியினரின் அனுசரணையுடன் ஒருவரைநிறுத்தி பொது வேட்பாளர் என்ற பெயரை ஏற்படுத்துவது சாலச்சிறந்தது என ராவ்கருதினார். இது பல்வேறு சக்திகளையும்அனுசரித்துப் போனவர் என்பதைக் காட்டுவதுடன் தோல்விக்கான வாய்ப்பையும் இல்லாது பண்ணிவிடும். அவ்வாறு தனது விருப்பத்திற்குரிய ஒரு பொது வேட்பாளரைநரசிம்மராவால் கண்டுபிடிக்க முடியவில்லை,

சங்கர் தயாள் சர்மாவின் மீது நரசிம்மராவுக்கு சில ஆட்சேபனைகள் உண்டு. பாரதீய ஜனதாவுக்கு சர்மாவின் மீது அனுதாபம் உண்டு. சர்மாவுக்கும் பாரதீய ஜனதா மீது அன்னியோன்னியம் உண்டு. சர்மாவைப்பொது வேட்பாளராக நிறுத்துவதற்குரிய வாய்ப்பு கணிசமான அளவு இருந்தது. நரசிம்மராவ் மனம் வைத்திருந்தால் அவரைப் பொது வேட்பாளராக நிறுத்தியிருக்கலாம் தன்னிடம் சில ஆட்சேபனைக்குரிய ஒருவர், அதுவும் பாரதீய ஜனதாவின் அனுதாபத்திற்குரிய ஒருவர் ஜனாதிபதியாக வருவது சிறுபான்மை அரசாங்கம் என்ற ரீதியில் தனக்கு ஆபத்தை ஏற்படுத்துமெனக் கருதினார். அத்துடன் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் சர்மாவுக்கு பெரும் ஆதரவு இருந்தது. இந்நிலையில்சர்மாவை ''பொது அபேட்சகர்'' என்ற ஏகப்பலம் மிக்கவராக இல்லாமல் பலவீனப்படுத்தி கடசியின் அபேட்சகராக மட்டுமே நிறுத்துவது தான் ராவ்விற்கு இருந்த ஒரே ஒரு மாற்று வழியாகும். பாரதீய ஜனதாவின் மீது அனுதாபமுள்ள இவரை பாரதீய ஜனாதாவின் ஆதரவின்றி பதவிக்குக் கொண்டுவர விரும்பினார்.

பாரதீய ஜனதா குறிப்பிடும் ஒருவரை உப ஜனாதிபதியாக்க ராவ் சம்மதித்தால் சர்மாவிற்கு ஆதரவளிப்பதாக பாரதீய ஜனதா பகிரங்கமாக அறிவித்தது. அத்துடன் சர்மாவை ஜனாதிபதியாக இருக்கத் தகுதியுள்ள ஒரு சிறந்த மனிதன் எனவும் கல்விமான்எனவும்அவருக்கு மேலும் புகழாரமும் சூட்டியது. பாரதீய ஜனதாவின் விருப்பத்திற்கு மாறானதும், கொம்யூனிஸ்டுக்கள் விரும்பக் கூடிய வகையிலும் ஒரு 'ஹரிஜனரை' உப ஜனாதிபதியாக ஆக்குவதும் என்ற அறிவிப்பை ராவ் விடுத்தார்.

இப்பின்னணியில் சர்மாவை ஜனாதிபதி வேட்பாளராக ராவ் அறிவித்தார். பாரதீய ஜனதா சர்மாவுக்கு எதிராக ஒருவரை நிறுத்தியது. சர்மாவின் மீது கொம்யூனிஸ்டுக்களுக்கு விருப்பமும் இல்லை. இந்நிலையில் சர்மா வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அரிதானது எனஅரசியல் விமர்சகர்கள்கூறலாயினர். ராவின் தெரிவை குழப்பமான சூழலில் மேலும் குழப்பமான தெரிவைச் செய்து விட்டார் என பலரும் கருதினர்.

ராவ்நிலைமையை இவ்வாறு குழப்பியசூழலில் சர்மாராவை ஒட்டி இருப்பதைத் தவிர வேறு வழி அவருக்கு இல்லை. சர்மா இந்நிலையில்நூற்றுக்கு நூறு ராவில் தங்கியிருக்க வேண்டியவரானார். சர்மாவைப்பலவீனப்படுத்துவதில்சர்மாவையும்பாரதீயஜனதாவையும் எதிரணியிற் கொண்டுவருவதில்ராவ்வெற்றிஅடைந்தார்.

இனைச் சர்மாவை வெல்ல வைப்பதே ராவின் பணி. பாரதீயஜனதாவின் பிடிக்குள் சிக்காதவர் என்பதை கொம்யூனிஸ்டுகளுக்கு உணர்த்துவதன் மூலமும், 'ஹரியனரை' உப ஜனாதிபதியாக நியமிக்கத் தயாராக உள்ளதைக் காட்டுவதன் மூலமும்கொம்யூனிஸ்டுக்களின் ஆதரவை வென்றெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பாரதீய ஜனதாவின் பிடிக்குள் ராவ் சிக்கவில்லை என்பது கொம்யூனிஸ்டுக்களுக்கு ஒரு சிறு திருப்தி. அத்துடன் ராவை இந்த இடத்திற் பாதுகாக்காது விட்டால் பாரதீய ஜனதா பலப்பட்டுவிடும்என கொம்யூனிஸ்டுக்கள் அஞ்சினர். ஆதலினால் ராவைப் பாதுகாப்பதைத் தவிர கொம்யூனிஸ்டுக்களுக்கு வேறுமாற்று வழியும் இல்லை. இவ்வாறு கொம்யூனிஸ்டுக்கள் தனக்கு ஆதரவளிக்கக்கூடிய சாதகமான ஒரு பூட்டை ராவ் போட்டார். மேலும் ஜனதாதள்ளிலிருந்தும் ஒரு பகுதியினரை கவர்ந்தார். இதன் மூலம் சர்மாவின் வெற்றியை உறுதியாக்கினார்.

சர்மாவை அபேட்சகராக நிறுத்திய போது அவருக்கு வெற்றிவாய்ப்பு குறைவு என எழுதிய அரசியல் விமர்சகர்கள் ஒருவாரத்துக்குள் வெற்றிவாய்ப்பு நிச்சயம் என எழுதத் தொடங்கினர்.

இவ்வாறு சர்மாவை போட்டியற்றஅல்லதுபொது அபேட்சகர் என்ற கௌரவமும் பலமும் இல்லாமலும், பாரதீய ஜனதாவின் அனுதாபத்தினை எதிர்முனைக்குத் தள்ளித தள்ளித் தங்கவைத்தும், கொம்யூனிஸ்டுக்களையும் சிறுபான்மையினரையும் கையாண்டதன் மூலம் சர்மாவை வெல்லவும் செய்தார் ராவ். அதே வேளை ராவின் இச்சதுரங்கம் பாரதியஜனதாவுக்குசினத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் உண்மை,

# 1983 யூலையும் படிப்பனையும்

இளையவன்

"போர் என்றால் போர்'' என்று தமிழ் மக்களை நோக்கிச் சவால் விட்டவாறு ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ தே. க. அரசு யூலை 23ன் நள்ளிரவு வேளையில் அதிர்ந்தது. அன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் திருநெல்வேலிப்பகுதியில் பலாலி வீதியில் ஒரு கண்ணிவெடிச் சம்பவம் இடம் பெற்றது, சிறிலங்கா இராணுவத்தினரின் வாகனத் தொடர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அந்த அதிரடிக் கண்ணிவெடித் தாக்குதலில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலவிதமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன.

இராணுவத்தினரை எதிர்கொண்டு விடுதலைப்புலிகள் நடத்திய முதலாவது வெற்றிகரமான தாக்குதலாக இது அமைந்தது. இந்த ஒரு சம்வம் புயலின் மையமாக நின்று இலங்கையின் அரசியல் வரலாற்றுப் போக்கை திசை திருப்பும் மையப் புள்ளியாக அமைந்தது. தென்னாசியப் பிராந்தியத்தில் புதிய குவிமையம் ஒன்றை இதுஏற்படுத்தியதுடன் உலகரங்கின் கவனத்தை ஈர்ப்பதாகவும் இருந்தது. இதன் மூலம் தமிழ் மக்கள் போராட்டம் புதிய தொரு கட்டத்தையும் வடிவத்தையும் எட்டியது.

இந்தச் சம்பவம் ஏற்படுத்திய அதிர்வு அலைகளில் இருந்து விடுபடுவதை சாட்டாக்கிக் கொண்டு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டது. இறந்த இராணுவத்தின் உடல்கள்கொழும்புக்கு கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதையடுத்து உயிரிழந்த இராணுவத்தினரின் உறவினர்கள், நண்பர்கள் என்றபெயரில் காடையர்களும் குண்டர்களும் கொழும்புக்கு அரசாங்க செலவிலேயே கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். இறுதி மரியாதை செலுத்துவதற்காக என்ற போர்வையில் கொண்டுவந்து குவிக்கப்பட்ட இக் கும்பல்கள் திட்டமிட்ட வகையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் இறங்கினர்.

தந்திரமான முறையில் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகிக் கொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனநாயகத்தையே கேலிக்குரியதாக்கும் வகையில் ''சர்வசன வாக்கெடுப்பு'' ஒன்றை நடத்தி பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தையும் நீட்டித்துக்கொண்டிருந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சின்னபின்னமாகியிருந்தது. பொதுவேலைநிறுத்தத்தை முறியடித்ததன்மூலமும், தொழிலாளர் விரோதப் போக்கின் மூலமும் அந்நிய மூலதனத்திற்கு நாட்டைத் திறந்துவிட்டதன் மூலமும் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான உணர்வுகள் முளைவிடத்தொடங்கியிருந்தன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அறிமுகமாக்கியும், வடக்கில் இராணுவத்தைஏவியும் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேசத்தை வெளிப்படையாகவே கக்கினார். ஐ.தே க. வின் அமைச்சர்கள் முதல் சாதாரண அரசியல்வாதிகள் வரை தமிழருக்கெதிரான நடவடிக்கைளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர்,

சத்தி, வாள், என்பன சகிதமாக இனவெறி கொண்டலைந்த காடையர்களின் கையில் அரசியல் வாதிகளால் வாக்காளர் பட்டியலும் தரப்பட்டது. ஏற்கனவே வீடுகளில் தமிழர்கள தென்பட்ட இடங்களில் எல்லாம் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. வாகனங்கள் யாவும் வழி மறிக்கப்பட்டு அதிலிருந்த தமிழர்கள் வெரியேஇழுத்தெடுக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டனபெண்கள்பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர். வீதிகளில் பட்டப்பகலில் நிகழ்ந்த இந்த அனர்த்தங்களுக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் காவல் புரிந்தனர்.

அத்துடன்தமிழர் குடியிருப்பு பகுதிகளிலும் தமிழர்களின் வீடுகளுக்கும் தேடிச்சென்று தாககுதல் நடத்தப்பட்டது தலைநகரில் மட்டுமன்றி குக்கிராமங்களிலும் கூட தமிழர் மீதான தாக்குதலும், தமிழர் சொத்து அபகரிக்கப்படுதலும், தமிழ்ப்பெண்கள் அவமானப் படுத்தப்படுதலும் தொடர்ந்துகொண்டிருந்தது.

மேலும் கொழும்பில் மட்டுமன்றி தென் னிலங்கைப் பகுதியெங்கும் இருந்த தமிழர்களின் பொருளாதார மையங்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்படடன. இதில் தமிர்களோடு தொடர்புகொண்டு வர்த்தகத்திலிடுபட்ட பிற நாட்டு நிறுவனங்கள் கூட விதிவிலக்குப் பெறவில்லை. வெளியில் மட்டுமன்றி, சிறிலங்கா அரசின் சிறைகளிலும் கூட தமிழர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. ஜூலை 25 ஆம் திகதியும், 27 ஆம் திகதியுமாக இரு தினங்களில் சிங்களக் கிரிமினல் கைதிகளும், வெளியே இருந்த காடையர்களும் குண்டர்களும் ஏவப்பட்டு நிராயுதபாணிகளாகசிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் ஐம்பதது மூன்று தமிழ் இளைஞர்கள் உயிர் துறக்க வேண்டியதாகியது.

திருக்கோணமலையிலும், அம்பாறையிலும் சிங்களக் காடையர்களின் கொட்டம் கொடிகட்டிப்பறந்தது தமிழர்களின் தாயகப்பகுதியெங்கும், இராணுவமும், பொலிசும் தமிழர்களைப் படுகொலை புரிவதில் ஈடுபட்டனர் யாழ்ப்பாணப்பகுதியில் கூட பஸ்வண்டிகள் மறிக்கப்பட்டு அதிலிருந்த பயணிகள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வீடுகளுக்குள் இருந்தவர்கள் கூட சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வாறாக தீவு முழுவதிலும் பௌத்த சிங்கள இனவெறிகோரத்தாண்டவமாடிக் கொண்டிருக்கையில் சிறிலங்காப் பாராளுமன்றம் விசித்திரமான விவாதங்களில் ஈடுபட்டது. தமிழ்மக்கள் தமது தேசியத்தை நிலைநாட்ட எடுக்கும் எத்தனங்கள் தான் கலவரங்களுக்கு காரணம் என்று விளக்கம் கூறியது. இதன் பயனாக ஆறாவது திருத்தச் சட்டம் என்பதை அறிமுகம் செய்து பிரிவினைக்குஎதிரான சத்தியப் பிரமாணம் செய்ய தமிழர்களைக் கட்டாயப்படுத்தியது.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கென தனிநாடு அமைப்பதுவே தமது இலட்சியம் என்று கூறிக்கொண்டிருந்த கூட்டணியினர் அரசியலில் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாத கையறு நிலைக்கு உள்ளாகினர். சாதாரண தமிழ் மக்கள் அடைக்கலமும் புகலிடமும் தேடி ஓடி ஒளிந்தது போலவே கூட்டணித் தலைமையும் அந்நிய நாட்டிற்கு ஓட வேண்டியதாகியது. அதனால் ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதையை முன்னெடுத்தவர்களிடம் அரசியல் தலைமையும் சென்றடையலாயிற்று.

சிறிலங்காவில் எழுந்த இனவாத அலை இந்து சமுத்திரப் பரப்பிலும், உலகரங்கிலும் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்திய. லட்சக்கணக்கான தமிழர்கள் இந்தியாவுக்குள் உயிருக்குஅஞ்சி ஓடசிறிலங்காவை மிரட்ட தருணம் பார்த்திருந்த இந்திய அரசும் இலங்கைப் பிரச்சினையில் நேரடி ஈடுபாடு காட்டத் தொடங்கியது. இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க இந்தியா முன்வந்தது. ஆயுதமும் பணபலமும் கொடுத்து வீங்க வைக்கப்பட்டனர். இந்திய நலன்களைப் பேணும் ஏஜெண்டுகளாகச் செயற்பட வைக்கப்பட்டனர். அதாவது இலங்கை அரசியலில் இந்தியா நேரடியாகத் தலையிட இக்கலவரம் வழி செய்தது.

இன்றைய இந்தியப் பிரதமரும், அப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சருமான பி. வி. நரசிம்மராவ் கொழும்புக்கு விரைந்தார். அதையடுத்து இந்திய அரசின் விசேட தூதுவராக ஜி. பார்த்தசாரதி சிறிலங்கா அரசுடன்பேரம் பேசுதல்களில் ஈடுபடலானார். சர்வகட்சி மாநாடு என்றும், பின்னிணைப்பு 'சி என்றும் அரசியல் பேச்சுக்கள் அடிபடலாயிற்று. ஆனால் இவை யாவும் பின்னாளில் தோற்றுப் போனது.

எனினும் 83 ஜூலை மாதத்தின் கொடிய நாட்கள் தமிழர்களின் தேசியப் பிரச்சினையில் பாதுகாப்பு முதலிடம் பெறுவதற்கு இட்டுச் சென்றது. தமிழர்களுக்கு இலங்கைத்தீவு எங்கும் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை என்ற உண்மை அந்தநாட்களில் உறுதிப்படுத்தப்பட்டது. காலாகாலமாக தமிழ் மக்களின் அரசியல்கோரிக்கைகளை ஒதுக்கித் தள்ளியும், தமிழ் மக்களை ஒடுக்கும்முயற்சியை முன்னெடுத்தும் வந்த சிறிலங்கா அரசு அச்சுறுத்திப்பணிய வைக்கவும் மிரட்டி ஒடுக்கவும் முயற்சி எடுக்கின்றது என்ற உண்மை அம்பலமாகியது. இனப்படுகொலை ஒன்றை பௌத்தசிங்

(7ஆம பக்கம் பார்க்க)

# இருபத்தி ஐந்தாவது ஒலிம்பிக் போட்டிக்கு பார்ஸிலோனா தயாராகிவிட்டது

இருபத்தைந்தாவது ஒலிம்பிக் போட்டிக்கு ஸ்பெயினின் வடகிழக்கு நகரமான பார்ஸிலோனா தயாராகிவிட்டது நாளை ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 16 நாட்களுக்கு நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கென பார்ஸிலோனாவை சகல வசதிகளும் கொண்ட நகரமாக நிர்மாணிக்க ஆறுவருடங்கள் பிடித்துள்ளன. பழைமைவாய்ந்த நகரமான பார்ஸிலோனாவின் புராதன தன்மை கெடாமலும், நவீன வசதிகளைக் கொண்டதுமாக இந்நகரத்தை உலகின் புகழ் பெற்ற கட்டடக் கலைஞர்கள் திறம்படநிர்மாணித்துள்ளனர்

இந்த நகரம் முற்றுமுழுதாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மட்டும் 800 கோடி அமெரிக்க டாலர்கள் செலவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒலிம்பிக் விளையாட்டுக்களைக் கண்டு களிக்க இரண்டரை இலட்சத்திற்கும் மேலான வெளிநாட்டவர்கள் இங்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நகரத்தைச் சுற்றி 40 கிலோ மீற்றர் நீளமான பாதை அமைக்கப்பட்டுள்ளன,

விளையாட்டு மைதானமும் அதனுடன் இணைந்த மாளிகையும் சுமார் எட்டுக் கோடி டாலர்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

பண்டைய ஒலிம்பிக் போட்டிகள் கி. மு. 776ஆம் ஆண்டு தொடக்கம் கிரேக்கத்திலுள்ள ஒலிம்பியா என்னும் நகரத்திலே நடத்தப்பட்டு வந்தன. கிரேக்க மக்கள் தமது கடவுளாகிய ''யசை'' யின் பிதாவை வழிபாடு செய்து இந்த போட்டிகளை நடத்தி வந்தனர். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை இவ் விளையாட்டுக்கள் இடம்பெற்று வந்தன. கி. பி. 393 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் தடை செய்யப்பட்டதுடன் அவை நிறுத்தப்பட்டன.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் பலத்த சிரமத்திற்கு மத்தியில் 1896ஆம்ஆண்டுஒலிம்பியாட் நகரத்துக்குஅருகேயுள்ள ஒரு கிராமத்தில் இடம்பெற்றது. 13 நாடுகள் மட்டுமே இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டன. தற்போது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜூலை - செப்டெம்பர் மாதங்களில் இவை உலகின் பல்வேறு நகரங்களிலும் இடம் பெற்றுவருகின்றன,

ஒலிம்பிக் விளையாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாக இடம் பெறும் அணிவகுப்பு இவ் விழாவின் ஒரு சிறப்பு அம்சமாகும். விளையாட்டில் கலந்துகொள்ளும் சகல நாடுகளையும் சேர்ந்த வீரர்கள் வர்ண வர்ண உடைகளில் இந்த அணி வகுப்பில் கலந்து கொள்வர். கிரேக்கத்தில் இந்த போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதால் அந்நாட்டு வீரர்கள் இந்த அணிவகுப்பில் முதலிடம் பெறுகின்றனர். ஒலிம்பிக் நடக்கும் நாட்டின் தலைவர் திறப்புரையை நிகழ்த்துவார். ஆரம்ப நிகழ்ச்சிகளின் உச்சக்கட்டம் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதாகும். இந்தத் தீபம் கிரேக்கத்திலுள்ள ஒலிம்பியா நகரத்திலிருந்து வீரர்களால் ஓட்டமாக எடுத்து வரப்படும்சுடர் ஒன்றின்மூலம் ஏற்றிவைக்கப்படும். அத்துடன் போட்டிகள் அனைத்தும் முடிவடையும் வரை இத்தீபம் எரிந்துகொண்டேயிருக்கும். இந்தத் தீபமேற்றும் நிகழ்ச்சி 1936-ல் பேர்ளினில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் இருந்துஇடம்பெற்றுவருகிறது ஒலிம்பிக் சின்னத்தை தாங்கிய கொடி 1920 ஆம் ஆண்டுபெல்ஜியத்தில் இடம்பெற்ற போட்டிகளில் உத்தியோகபூர்வமாக உபயோகிக்கப்பட்டது. ஒன்றுடன் ஒன்று இணைந்த ஐந்து வளையங்கள் நீலம், மஞ்சள் கறுப்பு, பச்சை, சிவப்பு நிறங்களைக் கொண்டதாக ஒலிம்பிக் சின்னம் அமைந்துள்ளது. இவ் வளையங்கள் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய கண்டங்களை குறிக்கின்றன.

நாலாண்டுகளுக்கு ஒருமுறை இப்போட்டிகளை நடத்தும் பொறுப்பை சர்வதேச ஒலிம்பிக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது. ஒலிம்பிக்விதிகள், நடைமுறைகள் மற்றும் விடயங்களையும், மத்தியஸ்தர்கள் ஆகியோரையும் இந்தக்குழு நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது இதன் தலைமையகம் சுவிற்சலாந்தின், லுசானி (*Lausanne*) யில் அமைந்துள்ளது.

இம்முறைஒலிம்பிக்போட்டிகளில் 160க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்துகொள்கின்றனர். போட்டிகளில் முக்கியவெற்றிகளைப் பெறும் சோவியத் சிதைவடைந்தபின்னர் இடம்பெறும்ஒலிம்பிக் போட்டி இதுவாகும். அத்துடன் நீண்டகால இடைவெளிக்குப்பின் தென்ஆபிரிக்கா இப்போட்டிகளில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

இதேவேளை கடந்த ஆண்டு தென்கொரிய நகரமான சோலில் இடம்பெற்ற போட்டிகளில் கியூபா, வடகொரியா உட்பட ஆறுநாடுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து உறுப்பு நாடுகளும்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாடுகளிடையே ஒற்றுமையையும் நட்புறவையும் வளர்க்க என ஆரம்பிக்கப்பட்ட போட்டிகள் கடந்த சிலபோட்டிகளில் அரசியலும் பெரியளவில் குறுக்கிட்டமை தற்பொழுது இந்நிலை சற்றுதளர்வடைந்திருப்பினும் அரசியல் காரணமாகப் போட்டிகள் பகிஷ்கரிக்கப்பட்டன. போதைவஸ்துபாவனை பெரும் தலையிடியைக் கொண்டு வந்துள்ளது.

போட்டிகளில் கிடைக்கும் வெற்றிகளால் ஏற்படப் போகும் புகழ், பணம் இவ் விளையாட்டுக்களையே சில வீரர்கள் தொழிலாகக்கொண்டுள்ளமை என்பவற்றால் வெற்றிபெறுவதற்காக சிலர் எதுவும் செய்யத் தயாராகி உள்ளனர்.

போதைப் பொருள்கள் மட்டுமல்ல, பல்வேறு இரசாயனங்கள் மூலம் உடலின் சக்தியை உடனடியாக அதிகரித்து தசைகளுக்கு முறுகேற்றி போட்டிகளில் வெற்றிபெற பலர்முயல்கின்றனர் இது ஒலிம்பிக் நடத்தப்படுவதன் நோக்கத்தையே பாழ்படுத்துவதாக உள்ளமை ஒருகவலை தரும் விடயமாகும்.

## வேலவன்

---

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
26.03.1964



மறைவு:
24.07.1983

### மகாதேவா இராஜகாந்தன்'

(பவுண்)

(மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்)

எம் நெஞ்சத்தில் உறைந்தவனே
மகனே, அண்ணா - நீ
எம்முடன் என்றைக்கும் வாழ்ந்து கொண்டே
இருக்கின்றாய்
உன் ஆத்மா சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்

சண்டிலிப்பாய், வடக்கு, அம்மா, தங்கை
சண்டிலிப்பாய். (2821)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

**A/L 92 கணக்கியல் II பரீட்சை**

28 - 07 - 92 செவ்வாய் 1.00 மணி

ஆசிரியர் : S. K. பிரபாகரன் B. B A

★ உடன் அனுமதிகளைப் பெறவும் ★

(சி4752)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 09 | 23 |
| – | – |
| 08 | 07 |
| – | – |
| 1971 | 1991 |

### லெப். சிவா (குட்டி)

(இராசப்பு அன்ரனி அமலநேசன்)
(கோபாலபுரம் நிலாவெளி, திருமலை)

குட்டி நம்மை விட்டு எட்டி விட்டாய்
ஆனாலும் தொட்டுவிட்டாய் தமிழீழப்படியினை
வாயில் காவலனே கோயில் கொண்டு விட்டாய்
வா- சில் என வாடுகின்றோம்.
சேயாய் நின்னுயிர் தான் வாசலில் வாராதோ
வருமளவும் வாடுகின்றோம், வாழ்த்துகிறோம்.

வருக — வாழ்க

கொக்குவில். திருமலைத்தொடர்பகம்.
(சி 4756)

---

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### வருடாந்தப்பொதுக்கூட்டம்

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் 1992-07-24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்குச் சங்கத் தலைவர் திரு. சு. சிவபாலன் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும். பொதுச் சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

செயலாளர்,
திருநெல்வேலி கிழக்கு. (சி/4754)

---

## 'தேனீ விடம்'

அநேகமான நோய் களுக்கு மருந்தாகும் தேனை வழங்கும் தேனீ, கொட்டுவது முடக்கு வாதத்திற்கு நிவாரணமாக அமைவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

முடக்கு வாதத்தினால் ஏற்படும் நோக்காடுகளையும் வலியையும் அகற்றும் சக்தியை தேனீயின் விடம் கொண்டுள்ளது.

வாஷிங்டனிலுள்ள டாகோ நகரிலுள்ள இளைப்பாறிய இராணுவ அதிகாரி யொருவர் இரு தினங்களுக்கு ஒரு முறை 105 முறை தேனீ கொட்டுதலை அனுமதித்து, தனது முடக்கு வாதத்திற்கு நிவாரணம் தேடுகின்றார்.

தேனீ கொட்டுவதால் ஏற்படும் வலியை விட பன்மடங்கு முடக்குவாதவலி உபாதையை ஏற்படுத்துகின்றது. எனவே தேனீ கொட்டுதல் சிறந்த நிவாரணமாகிறது என்கிறார் இந்த இராணுவ அதிகாரி.

முடக்கு வாதத்திற்கு தேனீயின் விடம் சிறந்த பலனளிக்குமென பல மருத்துவ ஆய்வுகள் தெரிவித்த பொழுதிலும், நோயாளி தேனீ கொட்டும் வலியைத் தாங்கிக் கொள்ள முன்வருவதில்லை. ஆயினும் இந்த இராணுவ அதிகாரி முன் வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என்கிறார் மெக்ஸிக்கோவைச் சேர்ந்த டாக்டர் டையற்றிச் கிளிங்காட். படிப்படியாக முடக்கு வாதத்திற்கு தேனீயின் விடம் நிவாரணம் வழங்கி வருவதையும் அனுபவித்தவர்கள் தெரிவிக்கும் பலாபலன்களையும் கொண்டு 'தேனீ விடம்' மருத்துவ உலகில் முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றது. புதிய ஆய்வுகளின் மூலம் புதுவடிவம் பெற்று உலகப் புகழ் பெற்றுவிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யுத்த களத்தில்

# "தந்தையர்களும் தனயர்களும்"

இவ்வருடம் வசந்த காலத்தின் ஆரம்பத்தில் வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஒரு சிறிய ரோந்துப் படையணியைப் புலிகள் தாக்கினார்கள். இதில் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். சிலர் தப்பியோடினர். தப்பியோடியவர்களுள் சிலர் ஒரு கிணற்றுக்குள் விழுந்து இறந்து போனார்கள். கொல்லப்பட்டவர்களின் சில சடலங்களையும் எடுத்துக் கொண்டு புலிகள் திரும்பி வந்துவிட்டார்கள். இச்சம்பவத்தைத் தொடர்ந்துஅடுத்தநாட்காலைதாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாகத் தமது பயணத்தைத் தொடர முயன்றதமிழர்களை இராணுவம் தடுத்து நிறுத்தியது. 'எங்களுடைய ஐயாவின் (இராணுவ அதிகாரியின்) மகனைப் புலிகள் கொன்றுவிட்டார்கள். அவருடைய சடலத்தையும் எடுத்துச் சென்று விட்டார்கள். ஐயா அழுதுகொண்டிருக்கிறார். புலிகளிடம் போய் சடலத்தை எங்களிடம் தரச் சொல்லுங்கள். அப்போது தான் உங்களைத் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிப்போம்' என்று சிப்பாய்கள் பயணிகளிடம்சொன்னார்கள். தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவ்விடயத்தில் தலையிட்டது. இறுதியாகச் செஞ்சிலுவைச் சங்கம் புலிகளோடு பேசி அதிகாரியின் மகனுடையதும் உட்பட புலிகளால் கைப்பற்றப்பட்டஇராணுவத்தினரின் சடலங்களை எடுத்துச் சென்று இராணுவத்திடம் ஒப்படைத்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் ஒரு அதிகாரியினுடைய மகன் என்பதால் இராணுவம் தீவிர முயற்சி எடுத்துச் சடலங்களை மீட்டது. ஆனால் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் புலிகளிடம் சிக்கிய சடலங்களையெல்லாம் இராணுவம் மீட்டிருக்கிறது என்றோ அல்லது மீட்பதில் அதிகம் சிரத்தையோடிருந்தது என்றோ சொல்லிவிட முடியாது. மேற்படி சம்பவத்தில் ஒரு அதிகாரி தனது தனிப்பட்ட செல்வாக்கை இராணுவத்துள் பிரயோகித்தார் என்றும் சொல்லலாம்,

இந்த அதிகாரியைப்போன்ற இன்னுமொரு உயர் அதிகாரியைப்பற்றி (அவர் ஒருதளபதி) அன்ரன் எற்வேர்ட் சில வாரங்களுக்கு முன்பு வீரகேசரி வார இதழில் எழுதியிருந்தார். அந்தத் தளபதியின் கதை சற்று வித்தியாசமானது. அவருடைய மகன் வன்னியில் யுத்த களத்தில் நிற்கிறார். தளபதி பதக்கங்களையும் அணிந்து கொண்டு கொழும்பில் பத்திரமாக இருக்கிறார். யுத்தத்தில் நிற்கும் மகன் தன்னைப்போல பாதுகாப்பான இடத்தில் இல்லை என்பது தளபதிக்கும் தெரிகிறது. எனவே குறைந்தபட்சம்தனது மகனின் உயிருக்காகவாவது சமாதானம் உருவாக வேண்டுமென்று அவர் விரும்புவதாக அன்ரன் எற்வேர்ட் எழுதியுள்ளார்.

இவ்விதம் யுத்தமுனைக்குச் சென்ற வேறு சில (தளபதிகளின்) தனயர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கிறார்கள். கடந்த வருடம் பலவேகய ஒன்றின்போது பிரிகேடியர் வீரதுங்கவின் மகன் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தில் கெரில்லாப் போரை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நசித்து விடுமாறு கூறி எழுபதுகளின் இறுதியில் ஜெயவர்த்தனவால் அனுப்பப்பட்டவர்வீரதுங்க இவருடைய மகன் திருமணமாகிய சிறிது காலத்தில் ஆனையிறவு வெளியில் கொல்லப்பட்டார். இந்த மாதம் பலவேகய இரண்டின் போதும் விமானப்படையின் இரண்டாவது தளபதியுடைய மகன் கொல்லப்பட்டார். பலவேகய இரண்டில் இலங்கை விமானப்படை இழந்த வை-8 விமானத்தில் இருந்த அதிகாரிகளில் இவரும் ஒருவர்.

தளபதிகளாய் இருந்த அல்லது இப்பொழுதும் தளபதிகள் முதுநிலை அதிகாரிகளாக உள்ள தந்தையர்களை, சகோதரர்களைப் பின்பற்றி தனயர்களும் சகோதரர்களும் இராணுவத்தில் இணைவது என்பது இலங்கை இராணுவத்திற்கு மட்டுமே உரியதொன்றல்ல. இந்திய இராணுவத்திலும் இத்தகைய இராணுவக் குடும்பங்கள் நிறைய உண்டு. வேறு பல நாடுகளின் இராணுவங்களிலும் இதை அவதானிக்கலாம். தந்தையர்கள் தளபதிகளாக அல்லது அதிகாரிகளாக இருக்கும் பட்சத்தில் தனயர்கள் இராணுவத்தில் அதிகம் சிரமப்படாமலேயே பதவி உயர்வுபெறமுடிகிறது. விசேஷ சலுகைகளை அனுபவிக்கவும் முடிகிறது. இலங்கை இராணுவத்தில் இப்போதுள்ள அநேகமான தளபதிகள் இனப்போரில் பதக்கங்களை வென்றவர்களும், உயர் பதவிகளிற்கு ஏறியவர்களும்தான். பெருமளவு அரசியல் செல்வாக்கினாலும் சிறிதளவு சேவை மூப்பு, திறமை அடிப்படையிலும் பதவி உயர்வு பெற்ற தளபதிகள் கொழும்பில், அல்லது முகாம்களின் மிகப்பாதுகாப்பான நிலஅறைகளிற்குள் இருந்து கொண்டு திட்டமிடவும் கட்டளை அனுப்பவும்முடிகிறது.

ஆனால் தனயர்களின் கதியோ யுத்தமுனைகளில் 'கரணம் தப்பினால் மரணம்' என்பதாக உள்ளது. இது அன்ரன் எற்வேர்ட் குறிப்பிட்ட தளபதிகளைப் போன்றவர்களை கலவரப்படுத்துகிறது.

### நிலாந்தன்

தளபதிகளோ அல்லது அதிகாரிகளோ பொதுவாக மேற்தட்டு, நடுத்தர வர்க்கங்களிலிருந்தே வருகிறார்கள். ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கக் கூடிய இவ்வர்க்கத்தினர் பெரும்பாலும் சிங்கள சமூகத்தின் அபிப்பிராயங்களை உருவாக்குபவர்களாகவும் மாற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள். நகரங்களிலும் கிராமப்புறப் பண்ணைவீடுகளிலும் பாதுகாப்பாக இருந்தபடி, வடக்குக்கிழக்கில் நடக்கும் யுத்தத்தை ஒரு தவிர்க்க முடியாத குரூரமான யதார்த்தம் என்றே இவர்களில் அநேகர் கருதுகிறார்கள். தீவின் வறண்ட ஒரு மூலையில் பனை மரங்களின் மறைவிலிருந்தபடி சிங்கள இளைஞர்களைக் கொல்லும் "பேராசை பிடித்த தமிழர்களை" எவ்விதத்திலும் தமது இளைஞர்கள் வென்றுவிடுவார்கள்என்று இவர்கள் நம்புகிறார்கள். யுத்த முனைகளிற் கொல்லப்படும் சாதாரண சிங்களச் சிப்பாயை இவர்கள் இலக்கங்களிற் கூடாகவே அறிந்து கொள்கிறார்கள். ஆனால் முகம் தெரியாத அந்தச்சிங்கள இளைஞனின் வறிய பெற்றோர், விகாரைகளிலும் தேவாலயங்களிலும் தமது மகனின் நீண்ட ஆயுளுக்காக மன்றாடிக்கொண்டிருக்கிறார்கள்.

திட்டமிடும் கட்டளையிடும் மையங்களில் செல்வாக்கைப் பிரயோகிக்கும் வலிமை அவர்களிடம் இல்லை அவர்களது மகன் யுத்தமுனையில் கொல்லப்பட்டால் முதலில் செய்தி வருகிறது. பிறகு சில சமயங்களில் சவப்பெட்டி வருகிறது. அநேகமாக அது திறக்கமுடியாதபடி மூடிச் சீல் வைக்கப்பட்ட சவப்பெட்டி அதில் அந்தச் சிப்பாயின் பெயரும், இலக்கமும் இருக்கும் பெட்டிக்குள் இருப்பது தங்களுடைய மகனின் பிரேதம்தானா என்பதை நிச்சயப்படுத்தவும் அவர்களிற்கு உரிமையில்லை. (சில சமயங்களில் சவப்பெட்டிகள் வீடு மாறி வந்துவிடுகிறன. இவ்வாறான ஒரு சம்பவம் சில மாதங்களிற்கு முன்பு நிகழ்ந்தது).

ஆனால் திட்டமிடும் கட்டளையிடும் மையங்களில் இருக்கும் மேற்தட்டு நடுத்தர வர்க்கத்தினரை யுத்தத்தின் இழப்புக்கள் அநேகமாக நேரடியாகத் தாக்குவதில்லை. எனினும் குறிப்பாக மூன்று சந்தர்ப்பங்கள் விதி விலக்காகி விடுகின்றன.

1) தளபதிகள், அதிகாரிகள் யுத்தத்தில் கொல்லப்படுதல் அல்லது அவர்களுடைய இரத்த உருத்துக்கள் கொல்லப்படுதல்.

2) விமானப்படையினர் கொல்லப்படுதல்.

3) கொழும்பில் அல்லது கேந்திர இடங்களில் குண்டுகள் வெடிக்கும் போது மேற்படி மூன்று சந்தர்ப்பங்களிலும் மேற்தட்டு நடுத்தர வர்க்கத்தினரின் பாதையில் யுத்தம் குறுக்கிடுகிறது. வை-8 விமானம் வீழ்ந்த சம்பவத்தில் ஒரேயடியாக ஆறு விமானப் படை அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள். இது நடுத்தர வர்க்கத்தினரை வலிமையாக உலுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த ஆறு அதிகாரிகளில் ஒருவர் வெளிநாட்டில் பயிற்சி முடித்துக் கொண்டு நாடுதிரும்பியவர்என்றும்யுத்த முனையைப் புதினம் பார்க்க இவர் ஆசைப்பட்டதாகவும் அதற்கான அனுமதி வந்தஉடனேயே அன்று காலையில் புறப்பட்டு வை-8 இல் வந்தார் என்றும் மேற்படி அதிகாரி விமானப்படையின் இரண்டாவது தளபதியினுடைய மகனாயிருக்கலாம் என்று கொழும்பிலிருந்து வரும் ஊகங்கள் தெரிவிக்கின்றன. பொதுவாக மேற்தட்டு நடுத்தர வர்க்கங்களிலிருந்து வருபவர்களே விமானப்படையில் அதிகம். இதனால் இராணுவம், எஸ்.ரி.எவ், கடற்படை என்பவற்றைவிட விமானப்படை நாகரிகமானது என்றொரு நம்பிக்கை சிங்கள வர்கவிடம் காணப்படுகிறது. கொழும்பில் ஜே.வி.பி யின் ஆட்சிக்காலத்தில் நகரின் பாதுகாப்பு விமானப்படையினரிடமே தரப்பட்டிருந்தது.

அடுத்தது கொழும்பில் அல்லது கேந்திர இடங்களில் குண்டுகள் வெடிப்பது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள நடுத்தர வர்க்கம் இது வரை நாளும் ரூபவாகினியில் பார்த்துக் கொண்டிருந்த ஒரு யுத்தம் அவர்களது வாசற்படிகள் வரை வந்து விட்டதை சடுதியாக உணர நேர்கிறது. யுத்தத்தின் அசலான முகத்தை நேருக்கு நேராகக் காண்பதற்கு அவர்களிற்குக் கிடைக்கும் மிக அரிதான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

எனினும் இவற்றைவிடவும் பயங்கரமான நாட்களை அவர்கள் கடந்து வந்திருக்கிறார்கள். ஜே.வி.பியின் இரண்டாவது எழுச்சி மேற்தட்டு நடுத்தர வர்க்கத்தின் நிலைகளை நேரடியாகத் தாக்கியது. அந்த நாட்களில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மூடிக் கிடந்தன. ஆஸ்பத்திரிகள் இயங்கவில்லை. ஒவ்வொரு நாளும் ஊரடங்குச் சட்டத்திலிருந்து தொடங்கியது. காரணமின்றிச் செய்யப்படுபவை கொலைகளாயிருந்தன. சிங்கள நடுத்தர வர்க்கம் முன்னெப்பொழுதும் அந்தளவிற்கு அச்சுறுத்தப்பட்டதில்லை. ஆனாலும் அந்த நாட்களை ஒரு கெட்ட கனவைப் போல அவர்கள் மறந்து விட முயல்கிறார்கள். அவை திரும்பி வராதெனவும் அவர்கள் நம்புகிறார்கள். புலிகளும் ஒருநாள் ஒரு கெட்ட கனவைப் போல ஆகிவிடுவர் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். அப்படித்தான் அவர்களுடைய விமர்சகர்களும் ஆய்வாளர்களும் அவர்களிற்குச் சொல்லி வருகிறார்கள். ஆனால் யுத்தத்தின் தர்க்க பூர்வ வளர்ச்சி ஒரு நாள் எல்லாருடைய கைகளையும் மீறிப் போய்விடக் கூடும் என்பதோ இலங்கைத்தீவு தொடர்ந்தும் ஒரு நாடாக இருப்பது என்பது சிங்களவர்களுக்கேயான ஒரு கனவாக மாறிவருகிறது என்பதோ அவர்களிற்கு எப்போது புரியும்?

---

## இந்த மண் உறுதி மிக்கது சிறுவர்களால் புனிதமாகிறது

**– மேஜர் முரளி நினைவு நிகழ்ச்சியில் அமுதன்**

(மன்னார்)

சிறு குழந்தைகள் கால் பதித்து துள்ளி விளையாடும் இந்த மண் உறுதி மிக்கது. வியர்க்க, வியர்க்க ஓடும் குழந்தைகளின்வியர்வைத்துளிகளாலும் இந்தநிலம் கழுவப்பட்டு புனிதம் அடைகின்றது, என்று மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் தெரிவித்தார்.

மேஜர் முரளியின் ஐந்தாம் ஆண்டு தினத்தையொட்டி மன்னார் பூநகரி பிரதேசத்தில் உள்ள கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி கடந்த திங்களன்று ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அமுதன் மேலும் கூறுகையில்,

மன்னார் பிரதான கொத்தணிப் பாடசாலைகள் பல குண்டு வீசி தகர்க்கப்பட்ட நிலையிலும், பரீட்சை நிலையங்கள் தாக்கப்பட்ட நிலையிலும், கொத்தணி அதிபர்கள் கொல்லப்பட்ட நிலையிலும், ஒன்பது கொத்தணிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டமை நாங்கள் இன்னும் உறுதியாகத் தான் நிற்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இப் போட்டியில் ஆரம்பத்தில் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் மங்கள விளக்கேற்றி வைக்க மாவட்ட தளபதி கதிர் தேசியக்கொடியை ஏற்ற, ஒன்பது கொத்தணிகளின் கொடிகளையும் கொத்தணி அதிபர்கள் ஏற்றி வைக்க, மாவட்டத் துணைத் தளபதி அல்பேட் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைத்தார்.

போட்டியின் இறுதியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் மடுத்திருப்பதியின் பங்குத் தந்தை அருட்திரு யோகராஜா, மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ரவிராஜ், மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. மர்லியா, மற்றும் கொத்தணி அதிபர்களும் உரையாற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

### விண்ணப்பபடிவங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான க.பொ.த. (சாதாரணதர) பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவ் விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தத்தமதுகோட்டங்களில்பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

### அமெரிக்கா உதவி

(கொழும்பு)

இலங்கை திரும்பும் அகதிகளுக்கு உதவுவதற்கென அவசர உதவியாக அமெரிக்கா இரண்டு கோடியே பதினேழு இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. கொழும்பிலுள்ளஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்திற்கு இத்தொகை வழங்கப்பட இருக்கிறது.

### மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டு இராசராஜேஸ்வரி பேச்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம்நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. 31-07-92 அன்று தேர் உற்சவமும் 01-08-92 அன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

### நிவாரண நிதி

1984 ஆம் ஆண்டில் போபால் நச்சுவாயு வெளியேற்றச் சம்பவத்தால் பாதிப்புற்றவர்களில் மேலும் ஒரு லட்சம் பேருக்கு நிவாரண நிதி வழங்கும்படி இந்திய உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாதந்தோறும் இருநூறு ரூபாய் வீதம் அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

### தமிழருக்கு

தொடங்கினால் நம் பார்வைக்கு முதலில் படுவது புதிய தமிழ் புலிகள் இயக்கம். (New Tamil Tigers) இது எழுபதுகளில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது சிறிலங்காப் பாராளுமன்றத்தில் சிங்கள ஆதிக்கம் வலுவாக வேரூன்றி இருப்பதால், அதனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. இதே வேளை, வேறொரு தளத்தில் மற்றொரு அமைப்பாக பல்வேறு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட பாராளுமன்றக் தெரிவுக் குழுவை அரசு இயங்க வைத்தது. தெரிவுக் குழுவின் சாதனை ஒரு எல்லைக்கப்பால் போக முடியாது. அதனாலும் பயன் இல்லை.

### விளை.ஐக்கிய கழகம் வெற்றி பெற்றது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர்போட்டி கடந்த 13ஆம் 14ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆண் பெண் இரு பிரிவுகளிலும் கூடிய புள்ளிகள் பெற்று முதலாம்இடத்தைப்பெற்றது.

### 1983 யூலை

கள மேலாண்மை அரசு சிறிலங்காவில் மேற்கொள்கின்றது என்பது வெட்டவெளிச்சமாகியது.

இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை எய்துவதற்கு ஆயுதம் தாங்கிப்போராடுவதைத்தவிர வேறு வழியேதும் இல்லை என்பது பரவலாக உணரப்பட்டது தமிழ்மக்கள் இதனைத் தெட்டத்தெளிவாகப்புரிந்துகொண்டதன் வெளிப்பாடாக ஏராளமான இளைஞர்கள் இயக்கத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் வரலாற்றுச் சக்கரத்தை முன்நோக்கி உருட்டும் சக்திகளாகப் பரிணாமம் பெற்றனர்

# அயோத்தியா பிரச்சினை பாராளுமன்ற அலுவல்கள் ஸ்தம்பிதம்

(டில்லி)

இராமர் பிறந்த இடம்-பாபர் மசூதி பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட விவ்ர்தத்தினை அடுத்து இந்தியாவின் இரு சபைகளும் நேற்று மதியம் வரை ஒத்திப் போடப்பப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

லோக் சபா அலுவல்கள் நேற்றுக்காலை ஆரம்பமாகிய போது -தேசிய முன்னணியும் இடதுசாரி மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகள் சபைக்கு நடுவில் வந்து அரசுக்குஎதிராக கோஷமிட்டது. இதனால் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இதன்னைத் தொடர்ந்து சபாநாய்கர்சிவராஜ் பாட்டீல் சபையை மதியம் 2.30 மணி வரை ஒத்திப்போட்டார்.

இதேபோலவே ராஜ்ய சபாவிலும், தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள், ஜனதாதள் எஸ் கட்சிகள் 'உத்தரப் பிரதேச அரசை கலைத்து விடும்படி' கோரி சபையில் கூச்சலிட்டனர்.

அத்துடன் அயோத்திப் பிரச்சினை குறித்த அறிக்கைகளை வெளியிடும் படியும் கோரி சபைநடுவில்வந்துஆர்ப்பாட்டம் செய்தனர்

இதே நேரம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் அயோத்திப் பிரச்சினை குறித்த தகவல்களை வெளியிடும் படிஅரசைக் கேட்டது.இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் ராஜ்ய சபாவில் இருந்தார்.

## மேலும் 10,000 அகதிகளை திருப்பி அனுப்ப ஏற்பாடு

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் மேலும் 10,000 பேரை இலங்கைக்கு திருப்பி அனுப்பிவைக்கவுள்ளதாக தமிழக நிர்வாக ஆணையாளர் பி. எஸ் ராமதாஸ் நேற்று முன்தினம் தஞ்சாவூரில் செய்தியாளரிடையே பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இதுவரை 23, 126 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்என்றும்.

இலங்கைக்கு தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல் பழுதடைந்ததினால் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் பணி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கப்பல் பழுது பார்க்கப்பட்டதும் மீண்டும் இந்தப் பணி தொடரும் எனத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தற்போது 150 முகாம்களில் 88,000 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாடு திரும்பிய அகதிகள் புனர்வாழ்வு

## ஐ.நா.உயர்ஸ்தானிகராலயம் 50லட்சம் டாலர் வழங்கியது

(வாஷிங்டன்)

தமிழகத்திலிருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஸ்தானிகராலயத்திற்கு ஐம்பது இலட்சம் அமெரிக்க டாலர்களை (31.5 மில்லியன்) வழங்கியுள்ளது.

தென்னாசியாவில் இதனால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கொள்கை வேலைத்திட்டங்களுக்குஏற்கனவே 30இலட்சம் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது.

அவசர மனிதாபிமான உதவிக் கோரிக்கையின் கீழே இத்தொகைகள் அங்கீகரிக்க படுகின்றனஎனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ - து)
சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்படவில்லமையால், சங்க எல்லைப்பரப்பிலிருந்து இடம் பெயர்ந்து, வேறு இடங்களில் வதியும் பொதுச் சபைப் பிரதிநிதிகள், தற்போது தாங்கள் வதியும் முகவரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமோ 31-07-1992 ந் திகதிக்குள் அறியத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
22 - 07 - 1992 (சி 4742)

## ஆங்கில - சிங்கள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கக்கூடிய மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. 05-08-92க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம் - 160,
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (2883)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

### வடமராட்சி

வடக்குநோக்கி இராணுவத்தினரால் பலத்த எறிகணைத் தாக்குதலும்நடத்தப்பட்டது. (க), (ச)

### ஏழாலை

இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் பாஸ்கரன் (வயது 22) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார், (ச. க.)

### நான்கு

யில் முஸ்லிம்காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்காக அதனிடம்சமர்ப்பித்துள்ள ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுபோல் இன அடிப்படையில், அரசியல் பிரிவுகள் எதனையும் உருவாக்கும் முயற்சியை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இத்திட்டம் அமுல்செய்யப்பட்டால் தற்போதைய பிரச்சினைகளைதீர்க்காமல்மேலும் இன்று இல்லாத இனப்பிரச்சினைகளை உருவாக்கி நாட்டைச் சீரழிக்கும் பெரும் பிரச்சினைக்கே வழிவகுக்கும்.

மலையகம் போன்ற ஒரு குறிப்பிட்ட சமுகம் செறிந்து வாழும் பகுதிகளில் சுயாட்சியுள்ள அரசியல் பிரிவுகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள் எழுவதற்கும் இந்த யோசனை வழிவகுக்கலாம். தறபோது இன ஐக்கியத்தை வலுப்படுத்துவதுதான் அவசியமாகவுள்ளது. எல்லா சமுகங்களும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் இணைந்து வாழ்வதற்கு கற்றுக்கொள்வதன் மூலமாகவே இதனை சாதிக்க முடியுமெனவும அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செல்லக்கிளி

கிளி அம்மான் குடியேற்றத் திட்டத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இக் குடியேற்றத் திட்டத்திலுள்ள சுரேந்திரன் பாலர்பாடசாலையில் லெப். செல்லக்கிளி நினைவாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இங்கு நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் பிரதேச பொறுப்பாளர் சீராளன் உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

### இராணுவ

மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

கடந்த 19ஆம் திகதி வவுனியா நகரப்பகுதி சென்று வந்தவர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்ற உளவுத்துறையினர் தாக்கியதால் இவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் .(தி)

### தமிழருக்காகப்

அவற்றைச் செய்தவர்கள் விடுதலைப்புலிகள்தான் என்று முடிவாக நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டு விட்டதா? தமிழ்நாட்டில் நூற்றுப்பத்துப் பேர் சைனைடு சாப்பிட்டார்கள். சிவராசன் கூடச் சாப்பிட்டுச் செத்தாரே ஏதாவது வன்முறை நடைபெற்றதா? ஏதாவது சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டதா? என்று பதில் அளித்துள்ளார். (தி)

## அநாவசியப் பிரச்சினைகள் ஒற்றுமையைப் பாதிக்கும்

ராஜீவ் காந்தி அனுதாப அலை காரணமாகஅ.இ.அ.தி.மு.க ஆட்சிக்கு வந்ததென்று நாம் சொன்னோமா? இல்லையே பிறகு எதற்கு ராஜீவ் அலையினால் தாங்கள் ஆட்சிக்கு வரவில்லை என அ.தி.மு.க.வினர்சொல்கிறார்கள்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி.

அவர் மேலும் தெரிவிக்கையில் இதுபோன்ற அநாவசிய பிரச்சினைகளைத்தவிர்ப்பதன் மூலம் அ.தி.மு.க—காங்கிரஸ் உறவு பலப்படும். நீங்கள் இல்லாமல்நாங்கள் இல்லை. நாங்கள் இல்லாமல் நீங்களில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்

### அரச

சுமார் இரண்டரை வாரங்களுக்கான தேவையையே பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது.

அதேவேளை மேலதிக உணவுக் கப்பல்களை யாழ். மாவட்டத்துக்கு அனுபபிவைப்பதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் சுமார் 2,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் மட்டுமே உள்ளது இப்பொருள்கள் பருத்தித் துறைக்கு எடுத்துவரப்படினும்தேவைக்குப்போதாது.

ஆனால் தற்போதுள்ள உலர் உணவு விநியோகத்தை மட்டும் செய்வதாயின் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு இந்த விநியோகத்தை தொடரலாம் எனகொழும்பில்தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். (க)

### முப்படை

ணமாகவே முப்படைகளின் தளபதிகளின் கூட்டுப்படை தலைமையகம் தமது நடவடிக்கைக்கு தடையாக உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

முப்படைகளின் தளபதிகளின் இக் குற்றச்சாட்டுகள் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி சாதகமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிகிறது.

### முஸ்லிம்

இவ்வாறு பொதுமக்கள்பொலிசாரால் தாக்கப்படுவதையும் மேற்படி சம்பவத்தையும் முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

பொதுமக்களைத் தாக்குவதற்குப் பொலிசாருக்கு உரிமை இல்லை என்றும் முஸ்லிம்காங்கிரஸ் கூறியுள்ளது. கொள்ளைச் சம்பவம் ஒன்றை விசாரிப்பதற்காக மேற்படி கிராமத்திற்குள் புகுந்த சிறிலங்கா பொலிசாருக்கும் முஸ்லிம்ஊர் காவற்படையினருக்குமிடையிலேயே இம்மோதல் ஏற்பட்டது இறுதியில் ஏழு முஸ்லிம் ஊர்காவற்படையினர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து கடைகள் மூடப்பட்டுஎதிர்ப்புத் தெரிவித்ததாகச்செய்திகள்தெரிவிக்கின்றன

### க. பொ. த.

53 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் - கல்விமான்கள், மற்றும் இதர உத்தியோகத்தர்களால் அளிக்கப்படும் பரீட்சை சம்பந்தமான சேவைகளுக்கான கொடுப்பனவுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டதால் மேலதிகநிதி ஏற்பாடாக 11 கோடி ஒரு லட்சத்து 94 ஆயிரம் ரூபாவும் தேவைப்படுகிறது எனபிரேரணையில் விபரிக்கப்பட்டுள்ளது இவைதவிர கல்வி உயர் கல்வி அமைச்சின் மற்றும் தேவைகளையும் சேர்த்து மொத்தம் 13 கோடி 60 இலட்சம் ரூபாவை குறைநிரப்பு பிரேரணை மூலம் பெற்றுக் கொள்ள பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

## செல்லப்பா இராசையா

219 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.செல்லப்பா இராசையா அவர்கள் நேற்று சிவபாதமடைந்தார்.இவர் காலஞ்சென்ற செல்லாத்தையம்மாவின்அன்புக்கணவரும் ஜெயராம் அற்புதமலரின் அன்புத் தந்தையும் நா.ஜெயராமின் அன்புமாமனாரும் பொன்னையா ஜெயமலர்(பிரான்ஸ்), ஜெயகாந்தன்(மாவீரன் குணா), ஜெயசீலன்(கனடா),ஜெயஹீதரன் ஜேர்மனி, கமலநாதன் ஜெயராணி (பிரான்ஸ்) ஜெயபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனாரும் இளங்கீரன், இளமாறன், மாதங்கி, கனிமொழி ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.7.92) வெள்ளிக்கிழமை மு. ப. 10. 00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
நா. ஜெயராம்
(மருமகன்)

(2882)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

23. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4974

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-6879, 41-9663, 41-4418, 27-4289, 42-3368, 22-1292, 28-2657, 24-6038, 26-4058, 26-1758.